

ஒரே இரவில் 100 பேர் சாவு 7



மோடி ஒரு சர்வாதிகாரி 8



மாற்றங்களை உருவாக்க போகும் ஜனாதிபதி தேர்தல் 14



கபடி பிறிமியரில் மட்டு. வீரர் 17


# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 247 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 15, வியாழன் 31.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


31 JUL 2014

**தெளிவான வானிலை**

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



இந்தக் காட்சி வெள்ளவத்தை ரயில் நிலையத்தில் படம்பிடிக்கப்பட்டது. ரயில் நிலையத்தில் தரித்து நின்று புறப்படும் ரயிலிலேயே பயணிகள் முண்டியடித்தவாறு இவ்வாறு ஆபத்தான முறையில் பயணம் மேற்கொள்கின்றனர். ரயிலின் வாசலில் தொங்கியவாறு பயணம் செய்வதே பெரும் ஆபத்து என்ற நிலையில், இரு ரயில் பெட்டிகளுக்கு இடையே நின்றவாறு பயணம் மேற்கொள்ள ஆயத்தமாக நிற்கின்றனர். இந்த ஆபத்தான பயணங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கண்க ளில் படாதோ? (ற)

## சீனாவின் நிகழ்வு முதன்முறையாக கொழும்பில்

கொழும்பு, ஜூலை 31
சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் நிறுவப்பட்டதன் 87 ஆண்டுகள் பூர்த்தியான நிகழ்வுகள், கொழும்பில் முதன் முறையாக நடத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள ஹில்டன் விடுதியில் கடந்த திங்கள்கிழமை நடந்த இந்த நிகழ்வில், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உட்படப் பல உயர் இராணுவ அதிகாரிகள் இலங்கை சார்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சீன இராணுவ அதிகாரியும், கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகருமான கேணல் லீ சென்ங் லின்,

22 ஆம் பக்கம் பார்க்க

# தமிழரசுக் கட்சியினுடைய அடுத்த தலைவர் மாவை

### நம்பகரமான வட்டாரங்களில் இருந்து கசிந்தது தகவல்

கொழும்பு, ஜூலை 31
இலங்கை தமிழரசுக் கட்சியின் மாநாடு செப்ரெம்பர் மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள நிலையில், அந்த மாநாட்டில் வைத்து தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா நியமிக்கப்படவுள்ளார் என்று நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை வவுனியாவில் நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டுக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவராக இருக்கும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், தனது வயதைக் கருத்தில் கொண்டு தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அண்மையில் அறிவித்திருந்தார். இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் தொடர்ந்திருப்பேன் என்றும் தெரிவித்திருந்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து இரா.சம்பந்தன் விலகுவதை அடுத்து, கட்சியின் புதிய தலைவராக தற்போதைய செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா நியமிக்கப்படலாம் என்று தெரியவருகின்றது. அத்துடன் புதிய செயலாளராக, மட்டக்களப்பைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் கூறப்படுகின்றது. (ற-5)

## ஊடகவியலாளர் மீது கெடுபிடி எதிர்த்து இன்று போராட்டம்

கொழும்பு, ஜூலை 31
பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஊடகவியலாளர்களை சிறையில் அடைக்கும் சதி முயற்சியைக் கண்டித்து யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இன்று மதியம் 12 மணியளவில் ஊடகவியலாளர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதில் சகல தரப்பினரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு கோரிக்கை

22 ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறை நகரசபை 3 மாதங்கள் இடைநிறுத்தம்

### அதிவிசேட வர்த்தமானி மூலம் வடக்கு முதலமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31
வல்வெட்டித்துறை நகரசபை 3 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைத்துள்ளது என்றும் தவிசாளரதும் சபையினதும் கடமைகள், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அதிவிசேட வர்த்தமானி மூலம் வடக்கு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையில் கடந்த சில மாதங்களாக, சபையின் தவிசாளருக்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே முரண்பாடுகள் நிலவி வருகின்றன.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற சபையின் கூட்டத்தில், சபையின் சகல கொடுப்பனவுகளுக்குமான அங்கீகாரம் வழங்கப்படாமல் உறுப்பினர்களால் நிறுத்தி வைக்கப்பட்டது.

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 184 ஆவது பிரிவின் பிரகாரம், நகரசபையை முடங்கச் செய்யும் வகையில் வாக்களித்தால் அல்லது .வாக்களிக்காமல் விட்டால், அந்த நகரசபைக்குரிய முதலமைச்சர், நகரசபை. மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கமைய வடக்கு மாகாண முதலமைச்சர் வல்வெட்டித்துறை நகரசபையை இடைநிறுத்தி வைக்கும் முடிவை எடுத்துள்ளார். அதன் பிரகாரம் சபையின் தவிசாளர் மற்றும் சபைக்குரிய சகல கடமைகளையும் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையார் மேற்கொள்ளுவார் என்று வர்த்தமானி மூலம் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்

22 ஆம் பக்கம் பார்க்க

## 6 மாத காலத்தில் 34 பேர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட 9 பொலிஸ் பிரிவுகளில் கடந்த 6 மாதங்களில் 34 பேர் விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர் என்று

22 ஆம் பக்கம் பார்க்க

## புகலிட கோரிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் பேசப் போவதில்லை

### அவர்கள் இந்தியாவில் இருந்தே வந்தார்கள் என்கிறது ஆஸி.

கொழும்பு, ஜூலை 31
157 புகலிட கோரிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கையுடன் எவ்விதமான பேச்சுக்களும் இல்லை என்று தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன், அவர்கள் இந்தியாவில் இருந்தே வந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.



குறித்த புகலிட கோரிக்கையாளர்கள் இந்தியாவில் வாழ்ந்திருக்க வேண்டும் அல்லது இந்தியா வழியாக வந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ள அவர், சுமார் ஒரு மாதம்

22 ஆம் பக்கம் பார்க்க

## இறுதிப்போரில் காயமடைந்தோரின் தகவல்கள் திரட்டப்படுகின்றன

### காணாமல் போனோர் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளும் ஆணைக்குழுவால்

கொழும்பு, ஜூலை 31
பொதுமக்கள் பகிரங்க அமர்வுகளில் வழங்கிய சாட்சியத்துக்கு அமைவாக, இறுதிப் போரில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டும் பணிகளை காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய இறுதிக் கட்டப் போரில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலைகளிலிருந்து தகவல்களை பெற்றுக்கொள் வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் திருகோணமலை, புல்மோட்டை வைத்தியசாலைகளுக்கான கண்காணிப்பு பயணத்தை நேற்றுமுன்தினம் மேற்கொண்டதாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசா ரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாஸ தெரிவித்துள்ளார்.

அதன்போது போரினால் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன என்று அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் ஆணைக்குழுவின் பகிரங்க அமர்வுகள் நடைபெற்றபோது, மக்கள் வழங்கிய சாட்சியங்களுக்கு அமையவே, தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் வவுனியா மற்றும் புல்மோட்டை ஆகிய பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டனர் என்றும் எச்.டபிள்யூ.குணதாஸ குறிப்பிட்டுள்ளார். (ற-5)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# ஒலிபெருக்கி பாவிப்பதற்கு நேர ஒழுங்கு நடைமுறை

## வடக்கு விவசாய அமைச்சின் தீர்மானத்தின் படி நாளை முதல் பின்பற்றுமாறு அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு மாகாணத்தில் ஒலி பெருக்கி பாவனையைக் கட்டுப்படுத்தும் விதத்தில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஒலிபெருக்கிகளின் பாவனையை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக நேற்றுப் புதன்கிழமை, வடமாகாண விவசாய அமைச்சில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மதகுருமார்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இரவு நேரங்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன என்று ஊடகங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன. அத்துடன் பொதுமக்களும் எங்களிடம் முறைப்பாடுகளைத் தெரிவிக்கின்றனர்.

காற்றில் கலக்கும் புகை மாசுகள் போல, காற்றில் வந்து சேரும் இரைச்சலும் ஒரு மாசு தான். இந்தச் சத்தத்தால் அதி திறமையான மாணவர்கள் கூட படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, பரீட்சைகளில் தோல்வியடைகின்றனர் என்று ஆய்வுகளில் தெரிய வந்திருக்கிறது. அது மட்டுமன்றி அதிக இரைச்சலான சூழலில் வாழ்பவர்கள் வன்முறையை விரும்புபவர்களாகவும் மாற்றப்படுகின்றனர் என்று சமீபத்திய ஆய்வுகளில் தெரியவந்திருக்கிறது.

நீண்ட காலம் போர்ச் சூழலுக்குள் வாழ்ந்த நாம், குண்டு வீச்சுக்களால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றியும் அங்கவீனங்கள் பற்றியும் அதிகம் பேசுகின்றோம். ஆனால், குண்டு வீச்சு இரைச்சல்களால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றி அக்கறை கொள்ளவில்லை. போருக்குப் பின்னர் வன்முறையும், வாள் வெட்டுக் கலாசாரமும் தலைதூக்கியிருப்பதற்கு இந்த இரைச்சல்கள் உளரீதியாக ஏற்படுத்திய பாதிப்புகளும் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

எமது சமூகத்தின் உளநலத்தையும், உடல் நலத்தையும் பேணுவதற்கு ஒலிபெருக்கிப் பாவனையை ஒழுங்கு செய்வது அவசியம் ஆகும். இதனை மதச் சுதந்திரத்தில் தலையிடுவதாகவோ, கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் குறுக்கிடுவதாகவோ யாரும் பொருள் கொள்ள வேண்டியதில்லை.

எங்களுக்கு மத அனுட்டானங்களை மேற்கொள்வதற்கும், விழாக்களைக் கொண்டாடுவதற்கும் சுதந்திரம் இருந்தாலும், அடுத்தவர் காதில் ஒலிபெருக்கிகளை அலற வைப்பதற்கு எமக்குச் சுதந்திரம் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதன் பிரகாரம் ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து (நாளை) சில ஒழுங்கு விதிகளை சம்பந்தப்பட்டவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

திங்கள் முதல் வியாழன் வரை இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 6 மணிவரைக்கும், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரவு 1 மணியில் இருந்து அதிகாலை 6 மணிவரைக்கும், ஞாயிற்றுக் கிழமையில் இரவு 12.30 மணியில் இருந்து அதிகாலை 6 மணிவரைக்கும் ஒலிபெருக்கிகளை பாவிப்பது தடைசெய்யப்படுகிறது. இந்த நடைமுறையை நாளையிலிருந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நேரத்துக்கும் அதிகமாக நிகழ்ச்சிகள் நீடிக்குமாயின் ஒலிப்பெட்டிகளை மட்டுமே பயன்படுத்த முடியும் எனவும் ஆலய வீதிகள் மற்றும் விழா மைதானங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்துவது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் விளம்பர வாகனங்களுக்கு மூன்று மாத கால அவகாசம் கொடுத்து உரத்து அலறும் சினிமாப்பாடல்களுக்குப் பதிலாக மெல்லிசையை ஒலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-5)

## நல்லூர் கந்தனுக்கு நாளை கொடி

வலி. வடக்கு, ஜூலை 31

வரலாற்றுப் புகழ் மிக்க நல் லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து இருபத்தைந்து நாள்கள் நடைபெறும் திருவிழாவில் 24ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 25ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை கந்தன் வெளி வீதியுலா வருவார். (ஐ-86)

## மீனவரை விடுவிக்குமாறு இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

இராமநாதபுரம், ஜூலை 31

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் நேற்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு முன் போராட்டம் நடத்தினர்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரி அவர்களின் உறவினர்கள் நேற்று மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கச் சென்றனர். எனினும் அங்கு அவர் இருக்கவில்லை. இதனால் அலுவலகத்தில் அமர்ந்து இருந்து அழுது புலம்பி, நூதனப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். அத்துடன் மீனவர்களை விடுவிக்காது விட்டால் தாம் தீக்குளிப்போம் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். (ஐ-10)

# களநிலை அறியாது அமெரிக்க தூதரகம் குற்றஞ் சாட்டுகிறது

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு,ஜூலை 31

தமிழீழ புலிகளுக்கு சார்பான புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் நாட்டுக்குள் இருக்கும் அவ்வாறான மனம் கொண்டவர்களின் கரிசனைகளை முன்வைத்தே இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் நல்லிணக்கம் தொடர்பான தமது கருத்துக்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள். அந்தத் தூதரகமானது பெரும்பாலும் கள நிலவரங்களை உதாசீனம் செய்து விடுகின்றது. அத்துடன் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய முன்னேற்றங்களையும் அது கவனத்தில் கொள்வதில்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சு. அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்கள் வருமாறு:-

நாடுகளுக்கிடையிலான ராஜதந்திர ஒழுங்கு முறைகளுக்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கௌரவமான நியமங்களுக்கு மாறாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்னெடுத்து வருகிறார்கள். இது பிரச்சினைகளை உணர்ச்சி மயமாக்குவதாகவுள்ளது. நாட்டிலுள்ள சில பிரச்சினைகளில் அவர்களுக்கு கவலையிருக்குமானால் அவைகளுக்குப் பதில்களை கண்டுபிடிக்காமல் இந்த மாதிரி செயற்பட்டுவருகிறார்கள். இந்த மாதிரி செயற்பாடுகள் எந்த வகையிலும் அர்த்தமுள்ள ஈடு பாடுகளுக்கு உதவியாய் இருக்கப் போவதில்லை என்பதை வலியுறுத்த வேண்டியிருக்கின்றது.

கடைசியாக வந்துள்ள கருத்துக்கள் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைக் குழு மற்றும் அதற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர்கள் தொடர்பானவையாகும்.

ஆணைக்குழு விசாரணையில் சாட்சியமளிக்க இருப்பவர்கள் மற்றும் சாட்சியமளித்தவர்களுக்கு பாதுகாப்புப் படையினரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்திருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். ஆனால் இதுவரை அரச தரப்பு எந்த ஓர் அதிகாரியிடமும் அவைகளை உறுதிப்படுத்தும் அப்படியான முறைப்பாடுகள் எதுவும் வந்து கிடைக்கவில்லை. உண்மையில் அமெரிக்க தூதரகம் நியாயமான முறையில் கவலை கொண்டிருந்தால் அவைகளை உறுதிப் படுத்தி அரசிடம் சமர்ப்பித்து பதிலை எதிர்பார்த்திருக்கலாம். இலங்கை அரசு இந்த அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை தாட்சண்யமின்றி நிராகரிக்கிறது. (ப)

# நல்லூர் பெருந்திருவிழாவில் 600 பொலிஸார்

நல்லூர் வருடாந்த உற்சவத்தில் அறுநூறுக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருப்பர் என வட மாகாண் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

வரலாற்றுப் புகழ்மிக்க நல் லூர் கந்தன் ஆலய கொடியேற்றம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. இதனை முன்னிட்டு இன்று நள்ளிரவு 12 மணிமுதல் நல்லூர் ஆலயச் சூழலுக்குள் நுழையும் வீதிகள் மூடப்படுவதுடன் 24 மணி நேரமும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் சுகாதார பணிமனையில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று இயங்கும் என்றும் பொலிஸார் இருபத்து நான்கு மணிநேரமும் சிவில் உடையிலும் சீருடையிலும் கடமையாற்றுவர் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (ஐ-86)


நீங்கள்

இலஞ்சம் அல்லது ஊழல் காரணமாக அநீதிக்கு உள்ளாகிய ஒருவரா?

இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிராக உங்களால் செய்யக்கூடியவை பற்றி நீங்கள் அறியாது இருப்பவரா?

இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிராக உங்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு உரிய பதில் கிடைக்கவில்லையா?

உங்களது உரிமைகள் தொடர்பாக இன்றே செயல்படுங்கள். உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம்.



கொழும்பு நிலையம்
183/5 ஜலெவல் வீதி,
கொழும்பு- 06
தொலைபேசி இலக்கம்:
0112 513313

மட்டகளப்பு நிலையம்
இல: 296, ½
திருகோணமலை வீதி,
மட்டகளப்பு
தொலைபேசி இலக்கம்:
065 2229594

மாத்தறை நிலையம்
இல: 17, காளிதாச வீதி,
மாத்தறை
தொலைபேசி இலக்கம்:
041 2233522

(504600/45.8)

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

"நேர்மையின் புகலிடம்"
வவுனியா நிலையம்
வைரவர்கோவில் வீதி, 02ம் குறுக்குத்தெரு
வவுனியா
தொலைபேசி இலக்கம்: 024 2227676

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 15 வியாழக்கிழமை (31.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 247


# இலங்கை சிங்களவருக்கே சொந்தம்
# அதற்காகவே குரல் கொடுக்கிறோம்

## பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 31

**"உலகில் ஒரே இனம் மட்டும் வாழும் நாடுகளென்றால் அது இஸ்ரேலும் இலங்கையும்தான். இஸ்ரேலில் யூதர்களும் இலங்கையில் சிங்களவர்களுமே வாழ்கின்றனர். சிங்கள இனத்தை பாதுகாப்பதற்காக குரல் கொடுப்பதை இனவாதம் என்று அர்த்தப்படுத்துபவர்களை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்த வேண்டும்"– இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர்.**

குருநாகல் நாரம்பல பிரதேச செயலர் பிரிவில் சாலியால வர்தனாராம விகாரையில் நடைபெற்ற பௌத்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சர்வமத அமைப்புக்களால் நன்மையில்லை. பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதற்காகவே நாம் உண்மையான திட்டங்களை வகுத்து வருகின்றோம். இலங்கை என்ற சிங்களத் தீவில் 70 சதவீதமாக நாம் வாழ்கின்றோம். ஆயினும் தெற்காசிய வலயத்தை எடுத்துக் கொள்வோமேயானால் நாம் வெறும் மழைக் குமிழி அளவிலேயே உள்ளோம். சிங்கள மொழி பேசும் இனத்தவருக்கு உலகிலுள்ள ஒரேயொரு நாடு இலங்கையாகும். எமக்கென வேறு நாடுகள் இல்லை."- என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியுள்ளதாவது.

"இந்த நாட்டை வளப்படுத்திய வரலாற்றுப் புகழ் மிக்க இனத்தை பாதுகாப்பதற்காக குரல் கொடுப்பதை இனவாதம் என்று அர்த்தப்படுத்தினால் அவ்வாறானவர்களை அங்கொடைக்கு அல்லது முல்லேரியாவுக்கு அனுப்பி வைத்து மூளையை பரிசோதிக்க வேண்டும். எமது திட்டங்களை வெளிநாட்டுப் பணம் பெற்று பிழைப்பு நடத்தும் சிவில் அமைப்புக்களே குழப்புகின்றன. உலகி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை31

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகப் பிரதம செயலாளரால் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு முதலமைச்சரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையால், தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்று தெரிவித்து வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயல்ட்சுமி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். இந்த வழக்கு விசாரணையின் போது, முதலமைச்சரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை மீளப் பெறுவதாக, முதலமைச்சர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் அமர்வின்போது 230 பேர் சாட்சியமளிப்பர்

### காணாமற்போனோர் குறித்த ஆணைக்குழு முன்பாக

யாழ்ப்பாணம், ஜூலை 31

மன்னாரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுக்கு 230 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 8 ஆம் திகதி மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் அமர்வில் 13 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 65 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். 9 ஆம் திகதியும் அதே பிரதேச செயலகத்தில் நடைபெறும் அமர்வுக்கு 5 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 60 பேர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பாலத்தில் சிந்திய ஒயிலால் சறுக்கி விழுந்தனர் 18 பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கைதடி மற்றும் நாவற்குழிப் இரும்புப் பாலங்களில் வாகனம் ஒன்றிலிருந்து வடிந்த ஒயில் காரணமாக சுமார் 18 பேர் வரை தமது மோட்டார் சைக்கிள்களுடன் சறுக்கி வீழ்ந்து காயங்களுக்குள்ளாகியுள்ளனர். நேற்றுக் காலை நடந்த இந்தச் சம்பவங்களில் சிலர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அநேகரது மோட்டார் சைக்கிள்கள் பகுதியளவில் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

பயணிகள் பஸ் ஒன்று யாழ்.நகரிலிருந்து புறப்பட்டு நாவற்குழிப் பாலம் மற்றும் கைதடிப் பாலம் ஊடாக சென்றுள்ளது. அந்த பஸ்ஸில் இருந்தே பாலங்களில் ஒயில் சிந்தியுள்ளது. அதைக் கவனிக்காது மோட்டார் சைக்கிள்களில் வந்த பலர் மோட்டார் சைக்கிள்களுடன் சறுக்கி வீழ்ந்துள்ளனர். விழுந்தவர்கள் எழுந்து எழுந்து செல்ல பின்னால் வந்தவர்களும் வந்து விழுந்து கொண்டிருந் தனர்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பங்காளியின் வியூகத்தால் அரச கூட்டுக்குள் குழப்பம்

### அரசுடனா, தனித்தா என மு.கா., ம.ம.மு. இவ்வாரம் முடிவு
### ஹெல உறுமய தேர்தலில் போட்டியிடவில்லை

கொழும்பு, ஜூலை 31

ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனிவழிப் பயணத்தை மேற்கொள்வ தற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ள நிலையில், கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் மற்றுமிரு பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியன தனித்துக் களமிறங்குவதா அல்லது அரசுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இவ்வாரம் தமது முடிவு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிபுணர் குழுவில் இடம்பெற தகுதியில்லையா?

### குற்றச்சாட்டை நிராகரித்தார் டெஸ்மன்ட் டி சில்வா

கொழும்பு, ஜூலை 31

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர் குழுவில் இடம்பெறுவதற்கு தனக்கு தகுதியில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மேற்படி குழுவின் தலைவர் டெஸ்மன்ட் டி சில்வா நேற்று நிராகரித்தார்.

சர்வதேச சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக தான் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தன்னுடைய பின்னணியோ அல்லது இதர விடயங்களோ அநாவசியமற்றவை என்றும், ஏனெனில், சட்டம் என்பது அனைவ

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவர்களிடையே மோதல் தடுப்பதற்குப் பொலிஸ் குவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கிடையே நேற்று ஏற்பட்ட முரண்பாடு மற்றும் குழப்பநிலை காரணமாக அங்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு எதிராக கல்கிசை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ள நிலையில் தேசிய வைத்தியசாலையில் ஒரு பகுதி மருத்துவர்களால் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டம் நடைபெறவிருந்த நிலையி லேயே மருத்துவர்களுக் கிடையே முரண்பாடு ஏற்பட்டு குழப்ப நிலை உருவாகியுள்ளது.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது. அங்கு மோதல் ஏற்படும் நிலை காணப்பட்டதை அடுத்தே பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற-4)


## பிரதேச செயலகத்தின் உற்சவகால பணிமனை மாநகர முதல்வரின் உத்தரவால் பிடுங்கப்பட்டது

### இந்த ஆண்டு பணிமனை அமைக்கப்படாது என்கிறார் நல்லூர் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் அமைக்கப்பட்டு வரும் உற்சவகாலப் பணிமனையை இந்த வருடம் அமைப்பதற்கு மாநாகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேரடியாகத் தலையிட்டுத் தடுத்துள்ளதுடன், தற்காலிகமாக அமைக்கப்பட்ட பந்தலையும் உடனடியாக அகற்றுமாறு பணித்துள்ளார். அத்துடன் குறித்த காணிக்குள் யாரும் நுழையாதவாறு தடுப்பு வேலியும், மாநகரசபை முதல்வரின் நேரடி வழிகாட்டலில் நேற்று மாலை அமைக்கப்பட்டுள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க)



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்



## சதாசிவம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற களஞ்சியக்காப்பாளர் கட்டடத் திணைக்களம், முன்னாள் தலைவர், நீர்வேலி, ப.நோ.கூ.சங்கம், கோப்பாய் விவசாய சம்மேளன பொருளாளர்)

கரணவாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் குமாரசாமி நேற்று( 30.07.2014) புதன்கிழமை காலமனார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-இராசம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் ஞானாம்பிகை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகாதேவியின் அன்புக் கணவரும், கஜேந்திரன்(கட்டடத் திணைக்களம்), யாழினி (நீதிமன்ற உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரமினா (நூலக உதவியாளர்), திலீபன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனும், கிரிவர்த்தனி, நிதுஷாயினி, ஆதினா ஆகியோரின் பேரனும், ஆச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற சிவபாலசுப்பிர மணியம் மற்றும் இராசாத்தி, சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற தெய்வேந்திரம் ஆகியோரின் சகோதரனும், மயில்வாகனம், தேவராசா, நகுலேஸ்வரி, தெய்வம், சிவகுமார், நகுலேஸ்வரி, சிவராசா, சிறிகணேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளுவானை லேன்,கோப்பாய் மத்தி. (50467)(5.6) தகவல்: குடும்பத்தினர்.

## பொன்னையா கணபதிப்பிள்ளை (லிகிதர்)


(50466)
(12.3.6)

உடுத்துறை வடக்கு, தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப் பிள்ளை நேற்றுமுன்தினம் (29.07.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணசாமி - அன்னராணியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்தவமணியின் பாமிகு கணவரும், காலஞ்சென்ற பொன்சிவராசா (முன்னாள் ஆசிரியர் - சென்ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரனும், இராச மனோகரி (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜீவமனோகரி மற்றும் செல்வமனோகரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பார்த்தீபன் மற்றும் நித்தியா (லண்டன்), ஜெயதீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரம் (சுவிஸ்), செல்வகுமார் (சுவிஸ்), விபுகரன் (லண்டன்), ஜெயனந்தா (சுவிஸ்), சங்கீதா (சுவிஸ்), தனபால சிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராயேஸ்வரி (ஆசிரியர்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உடுத் துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
உடுத்துறை வடக்கு, தாளையடி

# அரச அலுவலருக்கு வழங்கிய சேலைகள் தரம் குறைந்தவை

வலி. வடக்கு, ஜூலை 31

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச பெண் ஊழியர்களுக்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள சேலை. பெண்கள் அணிய முடியாதளவுக்கு கண்ணறையாகக் காணப்படுவதாகப் பெண்கள் கூறுகின்றனர்.

இந்த வகையில் யாழ். மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பெண்கள், ஆண்கள் தம்மால் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படும் சேலையை மற்றும் சேட் துணியை பணம் செலுத்தி வா்ங்கி அணிய வேண்டும் என அறிவுறுத்துகின்றனர் இல்லை யேல் கடமையாற்ற முடியாதளவுக்கு பிரதேச செயலாளர்களாலும் துன்புறுத்தல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக நேரிடுகிறது. அரச சுற்றறிக்கைகளிலோ அல்லது நிதி நிர்வாக சட் டங்களிலோ இத்தகைய அறிவுறுத்தல்கள் எவையும் காணப்படவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது.

இத்தகைய அநாகரிகமான செயற்பாடுகளை யாழ். மாவட்ட அரச உயர் அதிகாரிகள் காலத்துக்கு காலம் மேற்கொள்வதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை. இதனால் பொது நிர்வாக அமைச் சின் கீழ் கடமையாற்றும் அரச அலுவலர்கள் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகி வருகின் றார்கள்.

இதனையிட்டு மக்கள் பிரதிநிதிகளான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களோ அன்றி அமைச்சரோ கூட கவனம் எடுப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை திருமணம் செய்து ஐம்பது வயதைக் கடந்த பெண் அரச ஊழியர் ஒருவர் இதுபற்றி கூறுகையில், அன்று இந்த நடைமுறையை முன்னைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் அறி முகம் செய்ய முயன்ற உயர் அதிகாரி பெண் என்ற வகையில் சற்று கலாசாரத்துக்கு உட்பட்ட தான சேலையை அறிமுகம் செய்தார். ஆனால் இன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ள சேலை மிகவும் தரமற்றதாக எமது கலாசாரத்தையே கேள்விக் குறியாக்குவதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ-86)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


DIGITAL COLOUR PRINT
4R-(4X6) - 8.00
(INVITATION,VISITING CARD)
A4 COLOUR PRINT - 8.00
A4 GLOSSY PRINT - 12.00
(MINIMUM 100 PRINT)
SYENTHETIC ALBUM PRINTING
10X30, 12X30 - 200.00
(flat binding)
MOORTHY DIGITAL COLOUR LAB
62/20, STANLY ROAD,JAFFNA.
0212221358

தேசிய மட்டத்தில் மீண்டும் சாதனை




2014 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில்
எமது கல்லூரியின் நாட்டிய நாடக நிகழ்வு முதலாம் இடத்தினைப் பெற்று மீண்டும் சாதனை படைத்துள்ளது.
இச் சாதனையைப் படைத்த மாணவர்களையும்
பயிற்றுவித்த நடன ஆசிரியை திருமதி நிசாந்தி தனேந்திரன்
சங்கீத ஆசிரியர்களான திருமதி மகாலட்சுமி ஜெயநாதன், திருமதி ஞானாம்பாள் திருக்கேதீஸ்வரன்
ஆகியோரையும் உதவிகள் புரிந்து ஊக்குவித்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
கல்லூரிச் சமூகம்
யா/ இணுவில் மத்திய கல்லூரி.




# மரண அறிவித்தல்



## திருமதி சுபாயினி ரஜனிகாந்

யாழ். மல்லாகம் ஞானவைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், றொட்டியாலடி (RSK பாம்) சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஜனிகாந் சுபாஜினி (30.07.2014) புதன்கிழமை காலமா னார்.

அன்னார் சிவலிங்கம்-புஸ்பவதி தம்பதியரின் மகளும், இராஜகோபால்-புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும், ரஜனிகாந்தின் மனைவியும், ஹரிதாஸ், டக்சாயினி, கிருபா ஜினி, வரசினியின் சகோதரியும், ராஜபுத்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), விஜிதா (பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் தாயும், ஹரிஹரன், லதுஷன் வைஸ்ணவி ஆகியோரின் அத்தையும், நிரோயன், மிதுசனா, சுஜித்தன், தனுஸ் சாலினி, சந்தோஸ், ரேனுகா, றெயினோட் றொபின்சன், அபிசா, ஜேவேட் ஆகியோரின் பெரி யம்மாவும், இராஜேந்திரன்-விமலா, மஞ்சுளாதேவி, வனஜா-லக்ஷன் ஆகியோரின் மைத்துனியும், காண்டிபன், தனேஸ்குமார், சுகிர்தன், விஜயகௌரி ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக் கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(50474)
(10)

றொட்டியாலடி,
RSK பாம், சுன்னாகம்.

தகவல்:
ரஜனிகாந் (கணவர்)

# வலி.தெற்கில் நஞ்சூட்டப்படாத பழங்களின் விற்பனையை உறுதிசெய்யும் கலந்துரையாடல்

## வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது

வலி.வடக்கு, ஜூலை 31
வலி.தெற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட சந்தைகள், பொது இடங்கள், நடை பாதைகளில் தரமான, நஞ்சூட்டப்படாத பழவகைகளை விற்பனை செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் பழ விற்பனையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் வலி.தெற்குப் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஸ் தலைமையில் நடைபெற்றுள்ளது.


கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரமுகர்கள்

வலி.தெற்குப் பிரதேச சபையும் உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பணிமனையும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த பழ விற்பனையாளர்களுக்கான கலந்துரையாடலில் 75க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் விவசாய திணைக்கள ஆராய்ச்சிஅலுவலர்பி.கருணைநாதன், உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமரன், பிராந்திய உணவு மருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதகர் க.பார்த்தீபன் மற்றும் பொது சுகாதார அலுவலர்கள், சந்தை மேற்பார்வையாளர்கள், சந்தைக் குத்தகைக்காரர்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள்.

இதில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் தாம் வாழைக்குலைகளுக்குப் புகையூட்டுவதை ஒப்புக்கொண்ட போதிலும், நஞ்சு மருந்துகள் எவற்றையும் தாம் பழங்களை பழுக்க வைப்பதற்குப் பாவிப்பதில்லையென திட்டவட்டமாக கூறியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'சந்தைகளில் பழ வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மீது பெரிய அளவில் சட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும். இதனால் பாதிக்கப்படுபவர்கள் நீங்களாகவே இருக்க முடியும். இத்தகையதொரு நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் அ.ஜெயக்குமரன் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

உரிய சட்ட திட்டங்கள் உரிய முறையில் பிரதேச சபைகளினால் நடைமுறைப்படுத்தப் படுமாக இருந்தால் 90 வீதமான உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் நடவடிக்கைகளை நிறுத்த முடியும் என வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஸ் இங்கு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில்:
நாம் எமது பகுதி மக்களின் நன்மை கருதி பல்வேறு செயற்றிட்டங்களை மேற் கொண்டு வருகின்றோம் இந்த வகையில் அண்மையில் உணவகங்களின் உரிமையாளர்களுக்கான செயலமர்வை நடத்தியதுடன் அதில் வெற்றியும் அடைந்துள்ளோம்.

எமது மக்களின் பொருளாதார குடும்ப நிலைமைகளை உணர்ந்தவர்கள் என்ற வகையிலும் பழக்கவழக்கங்களை அறிந்தவர்கள் என்ற வகையிலும் தான் நாம் செயற்படுகிறோம். நாம் நாளாந்தம் உண்ணும் பழவகைகள் நஞ்சூட்டப்படுவதையும் அதனால் நாம் கடுமையாக பாதிக்கப்படுவதையும் அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (க-86)





வா! வா சண்முகா! வடிவேல் முருகா!
தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா வா

*மரகத மயில் மேல் வருமுருகா!*
*அரகர சிவசிவ ஆறுமுகா வா!*
*சரவண பவனே சண்முகனே!*
*வரம் தர வா வா என் முன்னே*
*அரவணி சிவனருள் பாலா பரவரமுரள பரமதயாளா*

*[சிவயோக சுவாமிகள்]*

யாழ்.நகரில் புகழ் பூத்த நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் நாளை[01.08.2014] வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாள்களும் அன்னதானமும் விடியற்காலையில் கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னதானப் பணிக்கு உதவ விரும்பும் அடியார்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே உதவிகளைச் செய்யலாம்.
தங்கள் பேருதவிக்கு நல்லைக்கந்தன் அருள்புரிவாராக.

திரு.செ.சோமஸ்கந்தன்
மூத்ததம்பி அன்னதான மடம்,
139, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
செ.தொ.பே.: 075 220 7896
(50463)(5-8)


# தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் 10 ஆவது இடம்

தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் 10 ஆவது இடத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



விசுவமடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் சேதுராகவன் என்ற மாணவனே இவ்வாறு சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவர் 2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலப்பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டு, கல்வி போன்ற துறைகளில் திறமையுடைய குறித்த மாணவன் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்று மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கணித ஒலிம்பியாட் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 11 மாணவர்களில் இவர் 10 ஆவது இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்கள் வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவுக்கு செல்லும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

அவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு கல்விச் சுற்றுலா செல்லவுள்ளனர். (வ-14)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 31
அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு இல்ல மெய்வன்மைப் போட்டிகள் திருமதி தவராசா கமலாதேவி தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்டக் காணிப் பதிவாளர் ப்.பிரபாகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இரவு 7 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (க-135)

## ஆண் மாற்று வலுவுடையோருக்கு வேலைவாய்ப்பு

மீசாலையில் இயங்கும் ஆதரவு கைத்தொழில் நிலையத்தினர் ஆண் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளனர்.

அத்துடன் வேலைகள் பழக விரும்புவோருக்கும் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

அவர்களை நிலையத்தில் தங்க வைத்து உணவு வசதிகளையும் வழங்கவுள்ளனர். 20 வயதுக்கு உட்பட்ட ஆண் மாற்றுத் திறனாளிகளை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்:

நிலையத்தில் பல்வேறு மரக்கன்று வகைகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் தும்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)


**கார் வாடகைக்குண்டு**

நாளாந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் கார் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 583 4770 (சி/15837) (45.6)

**சொக்கட்டான் பந்தல், பந்தல் பொருள்கள் விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள
அலங்காரப்பந்தல்- 40 அடி, சாதாரண பந்தல்-30 அடி, மணவறை, பூமணவறை, மேடை (சிறியது)
கதிரை-150, சாப்பாட்டு மேசை-10, லான்ட் மாஸ்ரர்
என்பன விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 815 2444, (50331) (4.6.3)
077 886 4275, 077 151 7921

**சரவணை சின்னமடுமாதா பெருவிழாவை முன்னிட்டு கடைகள் நிறுவுதலுக்கான அறிவித்தல்**

சரவணை சின்னமடுமாதா யாத்திரைத்தலப் பெருவிழாவானது 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
**04.08.2014 திங்கட்கிழமை நற்கருணை விழாவும்**
அதனைத் தொடர்ந்து மறுநாள் 05.08.2014 செவ்வாய்க்கிழமை காலை திருவிழாத் திருப்பலியும் இடம்பெற இருப்பதால் வருடா வருடம் இப்பதியிலே கடைகளை நிறுவுபவர்களும் மற்றும் இனிப்பு, கச்சான், ஐஸ்கிறீம் கடைகளைப் போடுபவர்களும் முன்கூட்டியே உங்கள் இடத்தைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**01.08.2014 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கடைகள் கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும்.**

எனவே வியாபாரிகள் நேரத்திற்கு சமுகம் அளித்து உங்கள் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.
04,05.08.2014 ஆகிய நாள்களில் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதை தங்கள் கவனத்திற்குத் தருகின்றோம்.

பரிபாலகர்,
வண.பிதா ஞா.பீற்றர்.
(50461) (12.3.6)



கொழும்பு, வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோயிலின் 27ஆவது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவத்தின் பாற்குட பவனி நேற்றுப் புதன் கிழமை நடைபெற்றது.
அங்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் முதற்பெண்மணியும் ஜனாதிபதியின் பாரியாருமான ஷிரந்தி ராஜபக்ஷ பங்கேற்றார். (ற)

# ராஜபக்ஷ ஆட்சி முடியும் போதே பௌத்தசாசனம் பாதுகாக்கப்படும்

## ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 31
ராஜபக்ஷ அரசின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரும் போதே பௌத்த சாசனம் பாதுகாக்கப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய புத்திஜீவிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,



ரணில் விக்கிரமசிங்க

ஊழல்களை மேற்கொள்ளும் அரசு நீண்டகாலம் முன்னோக்கிச் செல்ல முடியாது.
அத்துடன் ராஜபக்ஷ அரசு பௌத்த சாசனத்தை தமக்கு அடி பணிந்ததாக மாற்ற முயற்சித்து வருகின்றது.
அரசு பௌத்த சாசனத்தை பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்க வேண்டும். பௌத்த சாசனம் ஜனாதிபதிக்கு அமையவோ, கட்சிக்கு அமையவோ ஏற்படுத்தப்படவில்லை.
பௌத்த சாசனத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பௌத்த சாசன அமைச்சில் உள்ள சில பிக்குமார் உதவி வருகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யக் கூடாது.
கண்டியில் அண்மையில் இரவு நேர கார் ஓட்டப் பந்தயம் நடத்தப்பட்டது.
மகா நாயக்க தேரர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையிலும் அந்த பந்தயம் நடத்தப்பட்டது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வட மத்திய மாகாணத்துக்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஜூலை 31
வடமத்திய மாகாணத்தின் அபிவிருத்திக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 5 ஆயிரத்து 791 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.
வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் வீட்டுக்கு வீடு மற்றும் கிராமத்துக்கு கிராமம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வடமத்திய மாகாணத்தின் 30 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 997 கிராம சேவகர் பிரிவுகளில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
இரண்டு மாவட்டங்களிலும் உள்ள 3 லட்சத்து 48 ஆயிரத்து 926 குடும்பங்கள் இதனால் நன்மையடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இதற்கு மேலதிகமாக வட மத்திய மாகாணத்திலுள்ள 26 கிராமிய பாலங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை வடக்கு மாகாண சபையினால், வடக்கின் 5 மாவட்டங்களினதும் அபிவிருத்திக்கு 6 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை என்று கொழும்பு மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

# கடும்காற்றால் 316 வீடுகள் சேதம்

நுவரெலியா, ஜூலை 31
நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஒருமாதகாலமாக வீசிய கடும் காற்றினால் 316 வீடுகள் சேதமடைந்துள்ளன.
பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்துள்ளார்.
இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் தொடர்ந்தும் ஓரளவு கடும் காற்று வீசுவதற்கான சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ற)




மிருசுவில் படித்த மகளிர் திட்டம் 'துர்க்காபுரம்'

**அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான**

**அலங்கார உற்சவம் - 2014**

அலங்கார உற்சவம் ஜயவருஷம் ஆடி மாதம் 16ஆம் நாள்(01.08.2014) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 25ஆம் நாள்(10.08.2014) ஞாயிற்றுக்கிழமை இறுதிநாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறவுள்ளது. தேர்த்திருவிழாவாகிய 9ஆம் நாள் ஆடி மாதம் 24ஆம் நாள் (09.08.2014) சனிக்கிழமை விசேட அபிஷேகங்கள் பூசைகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதி உலாக் காட்சியும் இடம்பெறும். அத்துடன் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் வணக்கத்திற்குரிய யாழ்ப்பாணம் சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகளும் வருகை தந்து அம்பிகையினுடைய பக்த அடியார்களுக்கு அருளாசி வழங்கவுள்ளனர். அடியார்கள் இவ்விழாக் காலத்தில் பங்குகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான துர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

**'துர்க்காபுரம்'**
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா


# வெளிநாட்டுக் கடன் பெறுகை; இலங்கைக்கு எச்சரிக்கை

## சர்வதேச நாணய நிதியம் விடுத்தது

கொழும்பு, ஜூலை 31
வெளிநாட்டுக் கடன் பெறுகை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
அரசு மற்றும் வங்கிகள் வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமானது என்றும் தெரிவித்துள்ளது.
கடன் பெறுகைகளின்போது பணவீக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ள நிதியம், குறிப்பாக வர்த்தக அடிப்படையிலான கடன் பெறுகைகள் பாதகத்தன்மையை ஏற்படுத் தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.
அரசின் தற்போதைய நிதிக் கொள்கைகள் பணவீக்கத்தை வரையறுக்கும் வகையிலேயே அமைந்துள்ளன என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.
எனினும், பண வீக்க நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து தொடர்ந்தும் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென நிதியம் தெரி வித்துள்ளது. (ற)


யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவனும், திரு. திருமதி நல்லை G. கண்ணதாஸ் தம்பதியரின் தலைமகனும், கலைமகனுமாகிய செல்வன் கண்ணதாஸ் இசைநிலவன் அவர்களின்

**மிருதங்க அரங்கேற்றம்**





இடம் : இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
காலம் : 02.08.2014 சனிக்கிழமை மாலை : 3.00 மணி

ஆசியுரை :
நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

தலைவர் :
ச.லலீசன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

பிரதம விருந்தினர் :
வண.பிதா N.J.ஞானப்பொன்ராஜா (அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி)

சிறப்பு விருந்தினர்கள் :
திருமதி துஷியந்தி துஷாகரன் (அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)
தண்ணுமை வேந்தன் M. சிதம்பரநாதன் (முன்னாள் விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன் (ஓய்வுநிலை விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

மிருதங்க அளிக்கை மதிப்பீடு :
கலாவித்தகர் சி.செந்தூரன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி)

அரங்கிசைக் கலைஞர்கள்
பாட்டு: இசைமாணி தவநாதன் றொபேட்
வயலின்: நுண்கலைமாணி சு.கோபிதாஸ்
மிருதங்கம்: செல்வன் கண்ணதாஸ் இசைநிலவன்
கெஞ்சிரா: கலைமாணி பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா
கடம்: இளஞ்சுடர் ஞானவேல் வசந்
முகர்சிங்: கலாவித்தகர் N.சதீஷ்குமார்
தம்புரா: இசைக்கலைமாணி க.ரஜீவன்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
நல்லை G.கண்ணதாஸ் குடும்பத்தினர்.

# ஈராக் கிளர்ச்சியாளர்கள் வெளியிட்ட படுகொலைக் காட்சிகள்

பக்தாத், ஜூலை 31

ஈராக்கிலுள்ள போராளிகள் ரமழான் பண்டிகையையொட்டி இணையத்தளத்தில் கொடூர படுகொலைக் காட்சிகளை உள்ளடக்கியுள்ள 36 நிமிட வீடியோக் காட்சியை வெளியிட்டுள்ளனர்.

அந்த வீடியோக் காட்சி சுமார் 50 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு டிரக் வண்டியொன்றில் ஏற்றப்பட்டு திறந்த வெளியொன்றில் கைகள் பின்னால் கட்டப்பட்டு மண்டியிட்டு மரணதண்டனை நிறைவேற்றத்துக்காக காத்திருப்பதையும், அதன்பின்னர் அவர்கள்மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதையும் வெளிப்படுத்துகின்றது.

மரண தண்டனை நிறைவேற்றத்துக்குள்ளான அனைவரும் 40 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாவர். அவர்களுக்கு ஈராக்கிய சர்வாதிகாரியான சதாம் ஹூஸைனின் சொந்த நகரான திக்ரித்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக நம்பப்படுகின்றது. தம்மால் பிடிக்கப்பட்ட ஷியா இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு சன்னி இனத்தைச் சேர்ந்த போராளிகள் மரண தண்டனையை நிறைவேற்றும் காட்சியையே மேற்படி வீடியோ படம் உள்ளடக்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.

மேற்படி வீடியோக் காட்சியில் தரையில் மண்டியிட்டு முகம் நிலத்தை நோக்கியிருக்க அமர்ந்திருந்த கைதிகளைச் சுற்றி வளைத்து நின்ற போராளிகள் கைதிகளை ஒருவர் பின் ஒருவராகச்சுட்டுக்கொல்கின்றனர். தலையில் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளான அவர்களது சடலங்கள் நீரில் வீசப்படுகின்றன. (த)



வெளியிடப்பட்டுள்ள படுகொலைக் காட்சிகள்



தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்த பொதுமக்கள் தங்கியுள்ள ஐ. நா. பாடசாலை வளாகமான ஜபாலியா அகதிகள் முகாம் மீது நேற்று அதிகாலை 4 மணியளவில் பீரங்கி மூலம் குண்டுகள் வீசப்பட்டன.
இந்தத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதல் குண்டு மழை போல இருந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்த செய்தியாளர் ஒருவர் விவரித்துள்ளார். (த)

## மனித வெடிகுண்டு தாக்குதலில் ஆப்கன் அதிபரின் உறவினர் சாவு

காபூல், ஜூலை 31

ரமழானையொட்டி ஆப்கானிஸ்தான் அதிபரின் உறவினர் ஹஸ்மத்தைச் சந்திக்க வந்த ஒருவர், தனது தலைப்பாகையில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தினார். இதில் ஹஸ்மத் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தலில் போட்டியிட்ட அஷ்ரப் கனியின் கந்த ஹார் பகுதி தேர்தல் பிரசார ஒருங்கிணைப்பாளராக இருந்தவர் ஹஸ்மத் கர்ஸாய். இவர், விரைவில் பதவி விலகப் போகும் அதிபர் ஹமீத் கர்ஸாயின் உறவினர் ஆவார்.

ஹஸ்மத் கர்ஸாய் கொல்லப்பட்டமை குறித்து கந்தஹார் மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் தாவா கான் மினாபால் கூறியதாவது: ரமழானையொட்டி ஹஸ்மத் கர்ஸாயைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவிப்பதற்காக விருந்தினரைப் போன்று தற்கொலைப்படையை சேர்ந்த ஒருவர் அவரின் வீட்டுக்கு வந்துள்ளார். ஹஸ்மத்தைக் கட்டித் தழுவி வாழ்த்துத் தெரிவித்தபோது, தனது உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார். இதில், இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் எனத் தெரிவித்துள்ளார். (த)

# ஒரே இரவில் 100 பேர் சாவு

## காஸாவில் உக்கிரத் தாக்குதல்

காஸா,ஜூலை 31

காஸா நிலப்பரப்பில் ஹமாஸுக்கு எதிரான தனது தாக்குதலை இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கடந்த திங்கட்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட அதிஉக்கிரத் தாக்குதலில் மட்டும் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என காஸா சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை 10 இஸ்ரேலிய இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் ஐந்து இராணுவத்தினர் இஸ்ரேலுக்குள் சுரங்கம் வழியாக புகுந்த ஹமாஸ் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.



"நீண்ட நெடியதொரு தாக்குதல் நடவடிக்கைக்கு இஸ்ரேலியர்கள் தயாராக இருக்கவேண்டும்" என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சாமின் நெதன்யாஹூ தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச நாடுகளின் வேண்டுகோளை ஏற்று தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில், காஸா பகுதி மீதான தாக்குதல்களை திங்கட்கிழமை இரவு முதல் இஸ்ரேல் மீண்டும் தீவிரப்படுத்தியது.

இதற்கு முன்னர் தாக்குதல் குறித்து எச்சரிக்கும் பொருட்டு காஸாவின் வடக்குப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைய வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இஸ்ரேலிய பாதுகாப்புப்படை சார்பில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.


இதையடுத்து இஸ்ரேல் 60 ஏவுகணைகளை வீசி காஸா மீது தாக்குதலை மேற்கொண்டது. இதில், அங்கு இயங்கி வந்த ஒரே ஒரு மின் உற்பத்தி மையமும் தகர்க்கப்பட்டது.

இது குறித்து காஸாவின் மின் உற்பத்தி நிலையப் பொறியியலாளரான நடால் டோமன் கூறுகையில், "அந்த ஏவுகணைத் தாக்குதலில் மின்சார உற்பத்தி மையத்திலிருந்த நீராவி ஜெனரேட்டர் இயந்திரம் கடுமையாக சேதமடைந்தது.

"மற்றொரு ஏவுகணைத் தாக்குலில் எரிபொருள் நிரப்பி வைக்கும் தொட்டி தீப்பிடித்து எரிந்தது. இதனால் ஏற்பட்ட தீ செவ்வாய்க்கிழமை காலை வரை கொழுந்துவிட்டு எரிந்ததால், அதன் அருகில் தீயணைப்பு வாகனங்களால் செல்ல முடியவில்லை. இதனால் மின் உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் வீடுகளும் சேதமடைந்துள்ளன' என்றார்.

திங்கட்கிழமை மீண்டும் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 10 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து உயிரிழந்த இஸ்ரேல் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 53ஆக உயர்ந்துள்ளது.

காஸா பகுதியில் 9 சிறுவர்கள் உட்பட 26 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 241 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த 22 நாள்களாக நடைபெற்று வரும் சண்டையில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை1,088 ஆக உயர்ந்துள்ளது. (த)



மகாராஷ்டிர மாநிலம், புனே மாவட்டத்தில் உள்ள ஆம்பி கிராமத்தில் கனமழை காரணமாக நிலச் சரிவு ஏற்பட்டதில் 40 குடிசைகள் மண்ணுக்குள் புதைந்தன. இதில் 150 பேர் சிக்கியுள்ளதாகத் தெரியவருகிறது. சம்பவ இடத்துக்கு பேரிடர் மேலாண்மை மீட்புக் குழுவினர் சென்றுள்ளனர். மாவட்ட நிர்வாகம் சார்பில், மாவட்ட ஆட்சியாளர், மருத்துவக் குழு உள்ளிட்டோர் அடங்கிய குழுவும் அங்கு விரைந்துள்ளது. (த)

# கும்பகோணம் பள்ளித் தீ விபத்து: நிறுவுநருக்கு 10 ஆண்டுகள் சிறை



உயிரிழந்த மாணவர்கள்

சென்னை, ஜூலை 31

2004 ஆம் ஆண்டில் கும்பகோணம் ஸ்ரீ கிருஷ்ணா நடுநிலைப் பள்ளியில் 94 குழந்தைகளைக் காவு கொண்ட தீ விபத்து வழக்கில் பள்ளி நிறுவுநர் புலவர் பழனிச்சாமிக்குப் 10 ஆண்டுகள் கால சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. அபராதமாக 57 லட்சத்து 65 ஆயிரத்து 700 ரூபா விதிக்கப் பட்டுள்ளது. அவரது மனைவியும் பள்ளிப் பொறுப்பாளருமான சரஸ்வதி, தலைமையாசிரியைச் சாந்தலெட்சுமி, சத்துணவு அமைப்பாளர்கள் வசந்தி, விஜயலட்சுமி ஆகியோருக்கும் 10 ஆண்டுகள் கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மீதமிருக்கும் குற்றவாளிகள் பாலாஜி, சிவப்பிரகாசம், தாண்டவன், துரைராஜ் ஆகியோருக்கு ஐந்து ஆண்டுகள் கால சிறைத் தண்டனையும் 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட் டுள்ளது.

பொறியியலாளர் ஜெயந்திரனுக்கு 2 ஆண்டுகள் கால சிறைத் தண்டனையும் 40 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள் ளது. இந்தியத் தண்டனைச் சட்டம் 304 ஏ, பி பிரிவுகளின் கீழ் இந்தத் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.


இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 21 பேரில் 11 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் காசிராமன் தெருவில் இயங்கி வந்த ஸ்ரீ கிருஷ்ணா நடுநிலைப் பள்ளியில் கடந்த 2004 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி மதிய உணவுக்காகச் சமையல் செய்தபோது திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் பள்ளியின் மேல்மாடியில் இருந்த வகுப்பறைக் கதவு வெளிப்புறமாகப் பூட்டப்பட்டு இருந்ததால் அந்த அறையில் இருந்த குழந்தைகள் தீயில் சிக்கிக் கொண்டன. இதில் 94 குழந்தைகள் உயிரிழந்தனர். 18 குழந்தைகள் காயமடைந்தனர்.

இந்த வழக்கில் 24 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. இவர்களில் அப்போதைய தஞ்சை மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி எம்.பழனிச்சாமி, தாசில்தார் பரமசிவம், தொடக்கக்கல்வி இயக்குநர் கண்ணன் ஆகியோர் இந்த வழக்கில் இருந்து தங்களை விடு விக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, விடுதலை பெற்றனர். (த)

# நரேந்திர மோடி ஒரு சர்வாதிகாரி

## மகாராஷ்டிர முதலமைச்சர் சாடல்



பிருத்விராஜ் சவாண் - நரேந்திர மோடி

புதுடில்லி, ஜூலை 31

பிரதமர் நரேந்திர மோடி சர்வாதிகாரியாக நடந்துகொள்வதாக மகாராஷ்டிர முதலமைச்சர் பிருத்விராஜ் சவாண் குற்றம் சாட்டியுள்ளார்.

மும்பையில் மகாராஷ்டிர முதலமைச்சர் பிருத்விராஜ் சவாண் பிரதமர் மோடி பற்றி கூறுகையில், மோடி அரசால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். குஜராத்தில் மோடி சர்வாதிகார ஆட்சி நடத்தினார், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகார ஆட்சிதான் அமையும் என்று நாங்கள் அச்சப்பட்டவாறே நடந்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்களுக்கு மரியாதையும், பொறுப்புணர்வும் இருந்தன. ஆனால் அது தற்போது இல்லை.

தற்போதைய ஆட்சியில் மத்திய அமைச்சர்கள் நடத்தப்படும் விதம் சரியில்லை, அவர்கள் சுந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்படவில்லை. தேர்தலின்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மீது மக்களுக்கு இருந்த கோபத்தை மோடி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மோடி அரசு என்ற கனவை மட்டுமே விற்பனை செய்தார்.

மேலும், சந்தையில் பொருள் விற்பனை செய்வது போல் தன்னைச் சிறப்பாகச் சந்தைப் படுத்தியும் பெருமளவு விளம்பரங்கள் செய்தும் மோடி வெற்றி பெற்றுள்ளார் என்று தெரிவித்துள்ளார். (த)

# தீர்ப்பு வேதனையளிக்கிறது

## பெற்றோர் குமுறல்

சென்னை, ஜூலை 31

கும்பகோணம் தீ விபத்து வழக்கில் 11 பேர் விடுவிக்கப்பட்டிருப்பது ஏமாற்றமும் வேதனையும் அளிப்பதாக, உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் தெரிவித்திருக்கின்றனர்.

கும்பகோணம் பள்ளி தீ விபத்து வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 21 பேரில் ஸ்ரீ கிருஷ்ணா பள்ளி நிறுவுநர் பழனிச்சாமி உள்ளிட்ட 10 பேர் குற்றவாளிகள் என தஞ்சை மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பை வழங்கிய நீதிபதி முகமது அலி, இந்த வழக்கில் இருந்து 11 பேர் விடுவிக்கப்படுவதாக அறிவித்தார்.

தீர்ப்புக் குறித்து பெற்றோர்களில் ஒருவர் கூறுகையில்: எங்கள் குழந்தைகள் அடைந்த சித்திரவதைக்குத் தகுந்த நீதி கிடைக்கவில்லை. 11 பேரை நீதிமன்றம் விடுவிக்க ஏன் 10 ஆண்டுகள் நாங்கள் காத்திருந்திருக்க வேண்டும் எனத் தனது குமுறலை வெளிப்படுத்தினார்.

பெற்றோர்களில் மற்றொருவர் கூறுகையில்: சம்பவம் நடந்தபோது பள்ளியில் இருந்த ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். 94 குழந்தைகள் இறந்தபோது, ஆசிரியர்கள் மட்டும் எப்படி எந்தக் காயமும் இன்றித் தப்பினர்.

அவர்கள் குழந்தைகளை மீட்க முயற்சிக்க வில்லை. பொறுப்பற்ற அந்த ஆசிரியர்கள் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டமை வருத்தமளிக்கிறது என்றார்.

தீர்ப்புக் குறித்த அதிருப்தியின் உச்சத்தில் இருந்த பெற்றோர்களில் மற்றொருவர் முதலில் இந்த வழக்கில் 3 பேரை விடுவித்தனர்.

இன்று (நேற்று) 11 பேரை விடுவித்துள்ளனர். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக குற்றவாளிகளை விடுவிப்பதைக் காட்டிலும் மொத்தமாக அனைவரையும் விடுவித்து விடுங்கள்.

குழந்தைகளை இழந்த நாங்கள் இவர்களுக்குப் பதிலாகச் சிறைத் தண்டனையையும் சேர்த்து அனுபவித்துக்கொள்கிறோம் என அழுதார். (த)

# இலங்கை ஊடகவியலாளர்களுக்கு அநீதி பாராமுகமாகச் செயற்படுகிறது இந்தியா

## கருணாநிதி குற்றச்சாட்டு



சென்னை, ஜூலை 31

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பில் இந்தியா பாராமுகமாகச் செயற்படுவதாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி குற்றம் சுமத்தியுள்ளார்.

மு.கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் சிலர் ஓமந்தையில் எதிர்நோக்கிய சம்பவம் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய இந்தச் சம்பவம் தொடர்பில் அமெரிக்கா ஏற்கனவே அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்த நிலையில் அயல்நாடான இந்தியா, இந்த விடயம் தொடர்பில் மௌனமாக இருக்கின்றமை உலகத் தமிழ் மக்களுக்கு வேதனையளிப்பதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தமிழ் மக்கள் விடயத்தில் முன்னைய காங்கிரஸ் அரசு போன்று பாரதீய ஜனதாக் கட்சி அரசும் செயற்படக் கூடாது எனத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (த)

# லஷ்கர் தீவிரவாதி கைது

புதுடில்லி, ஜூலை 31

லஷ்கர் இ தொய்பாவின் முக்கிய தீவிரவாதி அப்துல் சுபானை டில்லி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் தீவிரவாதக் கருத்துகளைப் பரப்புதல், இளைஞர்களை லஷ்கர் இ தொய்பா அமைப்பில் சேர்த்து அவர்களைப் பயிற்றுவித்தல், தீவிரவாதத் தாக்குதலைத் திட்டமிடுதல் உள்ளிட்ட செயல்களைச் செய்து வந்துள்ளார்.

டில்லியின் சராய் காலே கான் பஸ் நிலையத்தில் பொலிஸார் அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

ராஜஸ்தான், ஹரியாணா, பீஹார் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களை மூளைச் சலவை செய்து லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பில் சேர்க்க அப்துல் சுபான் முயன்றுள்ளார்.

அவர் நிறுவனங்களின் பெரும்புள்ளிகளைக் கடத்திச் சென்று அதிகளவில் பணம் பறித்து, தீவிரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்தவும் திட்டமிட்டிருந்தார் என்று விசாரணையில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த)

# குறைகளை சுட்டிக்காட்டினால் அரசு எதிரியாகப் பார்க்கிறது

## அமைச்சர் விமல் வீரவன்ஸ குமுறுகின்றார்

கொழும்பு, ஜூலை 31
குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவோர் அரசுக்கு எதிரிகளாகத் தெரிகின்றனர் என்று தெரிவித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ.

பயணம் பிழையானது என்று சுட்டிக்காட்டுவோரை எதிரிகளாகவும், பிழைகளை மூடி மறைத்து முகஸ்துதி பாடுவோரை நண்பர்களாகவும் கருதும் அரசின் எதிர்காலம் பற்றி எம்மால் குறிப்பிட்டுக் கூறமுடியாதுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"அன்று எதிரிகளாக இருந்தவர்கள் தற்போது அரசுக்கு நண்பர்களாக மாறியுள்ளனர். இவ்வாறான ஓர் அரசை எவ்வளவு காலத்துக்கு ஆட்சியில் வைத்திருக்க வேண்டும் என்பது மக்களின் தீர்மானமேயாகும்.



நாட்டின் முற்போக்கான மாற்றங்களைச் செய்ய அரசுக்கு விருப்பம் இல்லாவிட்டால் அது எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பற்றிச் சொல்ல முடியாது.

இந்த அரசை உருவாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவரின் கட்சி தனித்துப் போட்டியிடுவது பாதிப்பு என ஜனாதிபதி கருதினால் அதற்கு உரிய தீர்வை ஜனாதிபதியே எடுக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அமைச்சுப் பதவியை தூக்கியெறியத் தயார்

## ஆனால் அதனால் பயனேதுமில்லை என்கிறார் அமைச்சர் ராஜித

பதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நான் அரசியலுக்கு வரவில்லை. எனது அமைச்சுப் பதவியை எந்த நேரத்திலும் துறக்கத் தயார். நான் வெளியேறினேன் என்பதனால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படப்போவதில்லை. - என்று தெரி வித்துள்ளார் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன.




பேருவளையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

'நாட்டையும் அப்பாவி வறிய மக்களையும் கருத்திற் கொண்டே நான் தீர்மானம் எடுக்கின்றேன். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில் ஜனாதிபதி ஆர்வம் காட்டுகின்றார். நான் எந்தக் கட்சியில் எந்தப் பதவி வகித்தாலும் அது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். சோசலிஷத்தின் ஊடாக மக்களுக்கு உதவி வழங்குவதே எனது நோக்கமாகும். என் நோக்கங்களிலிருந்து நான் ஒருபோதும் மாறப்போவ தில்லை. நான் தம்மீது நேசம் கொண்டுள்ளதாக ஜனாதிபதி அடிக்கடி என்னிடம் தெரிவிப்பார் எனினும், ராஜித என்னை விட வும் கொள்கைகள் மீது அதிக பற்று கொண்டவர் என ஜனாதிபதி குறிப்பிடுவார்.

அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி மனிதத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சூதாட்டத்தில் ஈடுபட்ட பெண் இராணுவத்தினர் கைது

கொழும்பு, ஜூலை 31
அத்துருகிரிய, கொடகம பிரதேசத்திலுள்ள பாழடைந்த கட்டடமொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த இராணுவப் பெண் கோப்ரலும் பெண் சிப்பாயும் உட்பட ஒன்பது பேர் பாணந்துறை, வலான பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், சூதாட்டத்தில் கட்டுப்பணமாக வைக்கப்பட்டிருந்த 58 ஆயிரம் ரூபாவும் பெண் சிப்பாய் உட்பட ஏழு பேரிடம் இருந்த 78 ஆயிரம் ரூபாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட கோப்ரலும் சிப்பாயும் பனாகொட இராணுவ முகாமில் பயிற்சியில் உள்ளவர்கள் எனவும் அவர்கள் இருவரும் விடுமுறையில் வந்திருந்தபோதே சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சூதாட்டம் இடம்பெற்ற கட்டடத்துக்கு வெளியே முன்னெச்சரிக்கைக்காக மின் மணி ஒன்று பொருத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் சுற்றி வளைப்புக்கு வந்தால் அந்த எச்சரிக்கை மணியை ஒலிக்க வைப்பதற்காக ஒருவர் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததா்கவும் தெரியவருகிறது. (ற)

# விவசாயிகளின் வாக்குகள் மிகவும் முக்கியமானவை

## மாதுலுவே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31
நாட்டின் விவசாயிகளது வாக்குகள் மிகவும் முக்கியமானவை என கோட்டே ஸ்ரீ நாக விகாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது.

"நாட்டின் மொத்த சனத்தொகையில் 74 வீதமானவர்கள் விவசாயிகளாகும். இதில் 54 வீதமானவர்கள் நெல் உற்பத்தியாளர்களாகும்.



நாட்டின் தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலின்' போது, விவசாயிகளின் வாக்குகள் முக்கியமானவை. எனினும் தற் போது விவசாயிகளும் அவர் களது குடும்பங்களும் பெரும் அசௌகரியங்களையும் சிர மங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

விவசாயிகளால் தற்போது தங்களது பொருள் களை விற்பனை செய்ய முடிய வில்லை. நெல் விளைவிக்க போதியளவு நீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை.

விவசாயிகளின் கைகளில் பணமில்லை. தற்போது நாட்டின் சில பகுதிகளில் நிலவி வரும் வறட்சி காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே காரணம்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# சுகாதார ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 31
நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் சுகாதார ஊழியர்கள் சிலர் நேற்று முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள முரண்பாடுகளை நீக்குவது, நிலுவை சம்பளத்தை பெற்றுக்கொள்வது உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப் புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் ஒருங்கிணைந்த தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

27 தரங்களைச் சேர்ந்த கனிஷ்ட ஊழியர்கள் இந்த பணிப் புறக்கணிப்பில் பங்கேற்றுள்ளனர் என்று ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் தீபிகா விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

நோயாளர் விடுதி எழுதுவினைஞர், உணவு கண்காணிப்பாளர், தொலைபேசி இயக்குநர், மின் தூக்கி இயக்குநர், உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபடும் கனிஷ்ட சுகாதார ஊழியர்களே இந்தப் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர். (ற)



இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அதில், எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க உட்படப் பல அரசியல்வாதிகளும் தூதுவராலயங்களின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். இலங்கை வர்த்தக சம்மேளனத் தில் 100 வருடங்களுக்கு மேல் அங்கத்தவர்களாக இருப்பவர்களுக்கு ஜனாதிபதியால் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (ற)

# மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட பஸ்

இலங்கை போக்குவரத்து சபை மாற்றுத்திறனாளிகளுக்காக சொகுசு மற்றும் அரைச் சொகுசு பஸ் சேவையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்தச் சேவைகள் கொழும்பிலும், கொழும்பை அண்டிய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தச் சேவையானது கொழும்பிலிருந்து மொரட்டுவை, கெஸ்பாவ, ஹோமாகம, மஹரகம, மாலபே, கடுவலை, களனி, ஜா- எல மற்றும் கிரிபத்கொட ஆகிய இடங்களுக்கு நடத்தப்படும்.

அதேவேளை இலங்கைக்கு 2 ஆயிரத்து 500 புதிய பயணிகள் பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. (ற)

# சவப்பெட்டிக்குள் போதைப் பொருள்: ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 31
சவப்பெட்டிக்குள் மறைத்து வைத்து பொரளையிலிருந்து மினுவாங்கொடைக்கு 17 கிலோகிராம் போதைப் பொருளை கடத்திய ஒருவரைத் கைது செய்துள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

புஞ்சி பொரளை ஒத்தா என்றழைக்கப்படும் வசந்த சஞ்ஜீவ அபயவீர என்ற சந்தேகநபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். (ற)

# ஐ.நா. விசாரணைக்குச் சரியான தகவல்களை வழங்க வேண்டும்

## இலங்கைக்கு ஜப்பானும் அறிவுறுத்து

ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை அரசு சரியான தகவல்களை வழங்க வேண்டும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிடோ ஹோபோ கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளுடன் நடத்திய் போர் தொடர்பான முறையான தகவல்களை ராஜபக்ஷ அரசு கொண்டிருந்தது. போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்று இலங்கை அதிகாரிகளுக்குத் தெரியும்.

அதுபற்றிய சரியான தகவல்களை அவர்கள் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஐ.நா. விசாரணைகளை இலங்கை அரசு நிராகரித்திருந்தாலும் அதற்கு தகவல்களை அளிக்க வேண்டும். இலங்கை அரச படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சரியா - தவறா என்று எனக்குத் தெரியாது"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் ஜப்பான் பங்கேற்கவில்லை. (ற)


உங்கள் குடும்ப முன்னேற்றத்துக்கான மாத சஞ்சிகை
ஒகஸ்ட் மாத இதழ் நாளை முதல் வெளிவருகின்றது
OLIARAZI
மாத சஞ்சிகை
ஒளி அரசி
இல்லத்தரசிகளின் தோழி
அன்பு + அறிவு + அழகு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு
நல்லதொரு குடும்பம்
விலை ரூபா 60 மட்டுமே!
தரம் 5 புலமைப்பரிசில்
பிரபல சிங்கள மாதிரி
வினாத்தாளின்
மொழிபெயர்ப்பு
தமிழ் மாணவர்களின்
நலன் கருதி உள்ளே...
Oli Arazi
சிறுவர்களுக்கான
பலமான அடித்தளம்
இலவச பிறந்தநாள்
வாழ்த்துகள்
நட்சத்திர இல்லத்தரசி
பெண்களுக்கான வாழ்வாதார
பயிற்சிக்கு ஒரு வாய்ப்பு
ரொமான்ஸ் இரகசியங்கள்
'ஆழி' குறும்பட விமர்சனம்
மனவலிமையில் சிறந்தவர்கள்...
வலைக் கீச்சுக்கள்
நீரிழிவு நோய் அதிகரித்துள்ளதா?
வேலையில்லா பட்டதாரி
- விமர்சனம்
வீட்டை சொர்க்கமாக மாற்ற...
பத்து வகை
போட்டிகள்
பரிசு
2,00,000/-
அரசியலோ பாலியலோ
கலக்காத ஒரு பரிணாமப்
படைப்பு
இன்னும்பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்
உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
விநியோகத் தொடர்புகளுக்கு: யாழ். - 0776569617 / 077 1945812 கொழும்பு - 0718 628379 / 011 5737592
விளம்பர தொடர்புகளுக்கு: 0787 273035

# அதிக சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஆண்கள்

இந்தத் தலைப்பை தேர்ந்தெடுத்தமைக்கு உதயனுக்கு என் மனமார்ந்த நன்றிகள். முதலில் சிக்கனம் என்றால் என்று பார்ப்போம். தேவையான பொருள்களை வாங்காமல் இருப்பது சிக்கனம் அல்ல. தேவையான பொருள்களை தேவையான நேரத்தில் வாங்குவது தான் சிக்கனம். உடல் நிலையை எடுத்துக்கொண்டால், பெண்கள் உடம்புக்கு ஏதாவது நோய் வந்தால் எளிதில் மருத்துவரைப் பார்க்கப் போவார்கள் என்று நினைக்கறீர்களா? ம். அதுதான் இல்லை.

இங்கே வலிக்குது, அங்க வலிக்குது என்று மருத்துவரிடம் போனால், அவர் ஏதாவது பயப்படும்படியான வியாதி இருக்கிறது என்று சொல்லிடுவார் என்று நினைத்து நினைத்துப் பயந்து, வியாதி முத்தி, பெரிய செலவு வரும்வரை காத்திருந்து, பெரிய அளவில் செலவு வைப்பார்கள்.

இதுதான் பெண்கள் மனம். ஆனால் ஆண்கள் அப்படியில்லை. இன்றைய காலகட்டத்தில் ஆண்கள் மாதிரி பெண்களும் வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டார்கள். இப்படி வேலைக்குப் போகும் ஆண்கள், பெண்களிடம் இருக்கும் துணிகளையும், காலணிகளையும், பார்த்து, மற்றும் இதர பொருள்களையும் கணக்குச் செய்து பாருங்கள், யாரிடம் அதிகம் இருக்கிறது என்பது தெரியும். இதைக் கணக்கிட்டாலே சிக்கனம் கடைப்பிடிப்பது யார் என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும்.

வரவு பார்த்து செலவு செய்வது பெண்களாம். பெண்களில் பலருக்கு தங்கள் கணவர்மாரின் வருமானமே தெரியாது, ஆனாலும் பிறந்தநாளுக்கு தங்கத்தில் ஆரம் வேண்டும், அதுவும் அவர்களுக்குப் பிடித்த டிசைனில்தான் வேண்டும் என்று இன்று இணையத் தில் வேறு பார்த்துப் பார்த்து வாங்குவார்கள், அதே கணவரின் பிறந்த நாளுக்கு அவர்கள் என்ன பரிசு கொடுக்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள்.

பாதி ஆண்கள் கடன் வாங்குகிறார்கள் என்றால் அதற்கு காரணம் வீட்டில் இருக்கும் பெண்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காகத்தானே.

**பெண்கள் ஆடை, ஆபரணங்கள் மற்றும் ஆடம்பரச் செலவுகளைச் செய்வதில் மும்முரம். அப்படி இருக்கும்போது எங்கே சிக்கனம் பிடிக்கப்போகிறார்கள்.**



பெண்கள் ஆடை, ஆபரணங்கள் மற்றும் ஆடம்பரச் செலவுகளைச் செய்வதில் மும்முரமாயிருப்பர். அப்படி இருக்கும் போது அவர்கள் எப்படிச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முடியும்? எனவே பெண்களைக் காட்டிலும் ஆண்களே அதிக அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள்.

*இனியவள், புலோலி*

CMYK

## விமர்சனம்



நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

அதிக சிக்கனத்தை கடைப் பிடிப்பவர்கள் ஆண்களா? பெண்களா?

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## மணவாளனே!



கண்ணாளனே - உன்
புன் சிரிப்பினால்
நீ...
இந்த உலகினையே
ஆளுகின்றாய்...
அதனால் தானோ
என்னமோ - என்
இதயத்தில் நீ
இடம் பிடித்தாய் ... -
உன் புன் சிரிப்பில்
நான் வாழ்ந்து
கொண்டிருக்கின்றேன் -
என்உணர்வுக்கு
அமைதி கொடுத்து -
உயிரை
ஆறுதல்படுத்துகிறேன்
நீ இந்த உலகில்
பிறக்கும்வரை
அன்பு மணவாளனே....

*புவனேஸ்வரன் திருச்செல்வி,*
*பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்.*



## புதிய நிர்வாக தெரிவுக்கு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 31
முத்துஐயன் கட்டு இடதுகரை கிராம அபிவிருத்திச் சங்கத்தை உடனடியாகப் புனரமைப்பதுடன் நிர்வாகத்தையும் தெரிவு செய்யுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தக் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கடந்த நான்கு ஆண்டுகளாகப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது.
இதனால் சங்கத்துடன் தொடர்புடைய வரவு- செலவுக் கணக்குகளை மக்கள் அறிய முடியாத நிலையிலுள்ளனர்.
இது தொடர்பாக இங்குள்ள மக்கள் முல்லைத்தீவு அரச அதிபர் உள்ளிட்ட பல உயரதிகாரிகளுக்கு மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர்.
மேலும் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் மோசடிகளைத் தவிர்க்க வேண்டுமாயின் புதிய நிர்வாகத் தெரிவு அவசியம் இடம்பெற வேண்டுமென மக்கள் தெரிவித்துள்ளனர், (க-500)

# முல்லை. மாற்றுத் திறனாளிகளுக்கு சகல வசதிகளும் வழங்கப்படும்

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவுப் போர்ப் பாதிப்புக்களை எதிர்கொண்ட மாவட்டம் என்பதன் காரணமாக மாற்றுத் திறனாளிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும்

முல்லைத்தீவு, ஜூலை 31
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு எதிர்காலத்தில் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் முல்லைத்தீவு அரச அதிபரும் தற்போதைய சமூக சேவைகள் அமைச்சின் செயலாளருமாகிய திருமதி இமெல்டா சுகுமார்.
முல்லைத்தீவு செம்மலைக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற் பயிற்சியும் வேலை வாய்ப்புக்கான நிதியுதவியும் வழங்கும் தொடக்க நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
மாற்றுத் திறனாளிகளை எமது சமூகம் அதிகளவில் மதிக்க வேண்டும். இவர்களுக்கு அரசின் உதவிகளை அதிகளவில் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப் படவுள்ளன.
இவர்களுக்கென வீட்டு வசதிகள், மலசலகூட வசதிகள், மருத்துவ வசதிகள் என்பன உருவாக்கப்படவுள்ளன.
முல்லைத்தீவு போர்ப் பாதிப்புக்களை எதிர்கொண்ட மாவட்டம் என்பதன் காரணமாக மாற்றுத் திறனாளிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்றார்.
நிறுவனத்தின் உப தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செம்மலை மகா வித்தியாலய அதிபர் எஸ்.விஜயரத்தினம், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ். அகிலன், சமூக சேவைகள் அலுவலர் தசரதன், மாற்றுத் திறனாளிகள், சங்கத் தலைவர் து.சகீலா உட்படப் பலர் உரையாற்றினர். (க-18)

## திருநகரில் வீதிகள் புனரமைப்பு

துணுக்காய், ஜூலை 31
துணுக்காய் திருநகரில் உள்ள டி-12, டி -15 ஆகிய வீதிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.
இந்தப் பகுதி விவசாயிகள், மாங்குளம் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் மற்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து தற்போது இந்த வீதிகளில் உள்ள மதகுகள், பாலங்கள் ஆகியவை புனரமைக்கப்படுவதுடன் வீதியின் புனரமைப்பு வேலைகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.
வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கு.வி.கர்ணனின் வழிகாட்டுதலின் பிரகாரம் இந்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. (க-18)



கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கருத்தரங்கில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், ஆனைவிழுந்தான் அ.த.க.பாடசாலை, ஸ்கந்தபுரம் இல.01, இல.02 பாடசாலைகள், கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை, கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம், யூனியன்குளம் அ.த.க.பாடசாலை, அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். (க-18)

## விளையாட்டு மைதானத்தை புனரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 31
மல்லாவியிலுள்ள அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை புனரமைத்துத் தருமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.
மல்லாவி நகரின் மையத்தில் இந்தப் பாடசாலை அமைந்திருப்பதால் அதிகளவில் மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர்.
ஆனால் இந்தப் பாடசாலையின் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள காணி குளத்தின் அருகில் உள்ள தாழ்வான பகுதியில் காணப்படுகின்றது.
இதனால் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்குவதால் மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.
எனவே இந்த மைதானக் காணியை மண் இட்டு புனரமைத்துத் தருமாறு மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

## போக்குவரத்து வசதியில்லாத மாந்தை கிழக்கு கிராமங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 31
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கிலுள்ள அம்பாள்குளம், கொல்லவிளாங்குளம் ஆகிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படாததால் இந்தப் பகுதி மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இந்தக் கிராமங்களில் தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.
இந்தக் குடும்பங்களுக்கு மருத்துவம், கல்வி மற்றும் இதர வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆறு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மல்லாவி நகருக்கு அல்லது மாங்குளம் நகருக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.
எனவே தமக்கு உரிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

## கிளிநொச்சியில் சட்டவிரோத மது உற்பத்தியும் விற்பனையும்

கிளிநொச்சி, ஜூலை 31
கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்ட விரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் சமூகச் சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர்.
பரந்தன், கோரக்கன்கட்டு, பூங்காவனச் சந்தி ஆகிய இடங்களில் சட்ட விரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் சமூகச் சீர்கேடுகளும் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றன.
பரந்தன் பகுதியில் ஏ-35 வீதியை மையமாகக் கொண்ட பூங்காவனச் சந்தி, கோரக்கன் கட்டு ஆகிய பகுதிகளில் பல்வேறு வடிவங்களில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருகின்றது. இது நடமாடும் வியாபாரமாகவும் இடம்பெறுவதுடன் குறிப்பிட சில வர்த்தக நிலையங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனைவிட மாலை 6 மணிக்குப் பின்னர் வயது வேறுபாடின்றிப் பலர் மதுபோதையில் தள்ளாடித்திரிவதைக் காண முடிகின்றது. அத்துடன் பல்வேறு சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன. உரிய அதிகாரிகள் இது தொடர்பாகக் கவனமெடுத்து இவ்வாறான சட்ட விரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறித்த பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

## மணல் கிடைக்காத நிலையில் உள்ளூர் வீட்டுத்திட்டப் பயனாளிகள்

### வெளிமாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுவதால்

முல்லைத்தீவு, ஜூலை 31
முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பெருமளவு மணல் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படும் நிலையில் நிரந்தர வீட்டுத் திட்டங்களை அமைக்கும் குடும்பங்கள் மணலைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டுள்ளன.
துணுக்காய், மாந்தை கிழக்கு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் தமது பிரதேசசெயலகப்பிரிவிலிருந்து வெளிஇடங்களுக்கு மணல் எடுத்துச் செல்லப்படுவதாகவும், தமக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு மணலைப் பெறமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.
மேலும் பிரதேச செயலர்களின் அனுமதியுடன் மணல் ஏற்றிய இந்தப் பகுதி மக்களைக்கூட பொலிஸார் கைது செய்து நீதிமன்றங் களில் நிறுத்திவருவதாகவும் அதேசமயம் அனுமதியின்றி வெளியார் மணல் கொண்டு செல்வதைப் பொலிஸார் கண்டு கொள்வதில்லை எனவும் மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
இதன் காரணமாக நிரந்தர வீடுகளை அமைக்கும் மக்கள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டது. (க-18)



## மருத்துவமனையைத் தரமுயர்த்துமாறு புதுக்குடியிருப்பில் கோரிக்கை

புதுக்குடியிருப்பு, ஜூலை 31
புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையை ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்த்துமாறு இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
சுமார் 40 ஆயிரம் மக்களின் உயிர்நாடியாக விளங்கும் இந்த மருத்துவமனையில் பெரும் வளப்பற்றாக்குறை நிலவி வருகின்றது.
இதன் காரணமாக இந்த மருத்துவமனையைத் தரமுயர்த்துவதுடன் வளங்களை அதிகரிக்குமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
போர்க்காலத்தில் பெரும் அழிவுகளை எதிர்கொண்ட இந்த மருத்துவமனை மீள்குடியமர்வின் பின்னர் இயங்கத் தொடங்கினாலும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.
இதனால் நோயாளர்களை முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்ப வேண்டிய நிலை காணப்படுகின்றது.
ஆகவே புதுக்குடியிருப்பு மருத்துவமனையை ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதன் மூலமாக மீள்குடியமர்ந்து பல்வேறு நெருக்கடிகளுடன் வாழ்கின்ற 40 ஆயிரம் மக்கள் இங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

# 17 கிலோ கஞ்சாவுடன் மாதகலில் ஒருவர் கைது


## சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் அதிரடி

யாழ்ப்பாணம், ஜூலை 31

வவுனியாவிலிருந்து வந்த பொலிஸார் 17 கிலோகிராம் கஞ்சாவுடன் மாதகலில் வைத்து ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து மாதகல் சொக்கப்புலம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சோதனையிட்டு அங்கிருந்து 17 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அவற்றை வைத்திருந்த குற்றச் சாட்டில் அந்த வீட்டு உரிமையாளரும் கைது செய் யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக மாதகல் பகுதியிலும் அதிகளவாக கஞ்சா போதைப் பொருள்கள் மிட்கப்பட்டு வருகின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னர் 132 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் 3 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். மாதகலுக்கு கஞ்சா கடத்தி வருவது தொடர்ந்து கொண்டிருக் கின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-4)



நவீன விவசாய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பெருமளவு நீரை விரயம் செய்யும் முறைகளே விவசாயத்தில் இப்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதிகளவான நீர்ப் பாவனையும் உரப் பாவனையும் யாழ். குடாநாட்டின் நீர் ஆதாரமான நிலக்கீழ் நீர் நிலைகளை மாசுபடுத்துகின்றன. இந்த நிலையிலும் இயற்கை ஆர்வலர்களான விவசாயிகள் சிலர் மட்டும் இன்னும் பாரம்பரிய முறையான விவசாய நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றனர். வடமராட்சி கிழக்கு, அம்பன் கிராம விவசாயி ஒருவர் பாரம்பரிய முறையிலான நீர்ப்பாசன முறைகளில் ஒன்றான பட்டை இறைப்பு முறையைப் பயன்படுத்தி வெங்காயத்துக்கு நீர் இறைக்கிறார். (வ-21)

### மின்கம்பங்களை பின்நோக்கி நகர்த்தல்

மானிப்பாய் ஆனந்தா வீதியில் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த இரு மின்கம்பங்கள் இலவசமாக மின்சார சபையினால் பின்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன. வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தி கீழ் 5 வீதிகள் பல கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மேற்படி வீதிகள் 16 அடி வரை அகலப்படுத்தப்பட்டதால் ஏற்கனவே வீதிகளில் நடப்பட்ட மின்கம் பங்களையும் பின்நோக்கி நகர்த்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்த கம்பங்களைப் பின்நோக்கிநகர்த்துவதற்கு பலஆயிரம் ரூபா மின்சார சபைக்குச் செலுத்த வேண்டி உள்ளதால் மின்கம்பங்களை நகர்த்துவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. சபையின் பணத்தைவிரயமாக்க விரும்பாத செயலாளர் இது குறித்து மின்சார சபை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இரு மின்கம் பங்களையும் இலவசமாக பின் நகர்த்துவதற்கு மின்சார சபையினர் ஒப்புதல் அளித்துள்ளனர். (வ- 115)

### மாவிட்டபுரம் தெற்கு அமெ. மிசன் பாடசாலையை மீள இயக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 31

மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையை மீள இயக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பாடசாலைக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், 2 வருடங்களாக துப்புரவு செய்யப்படாமல் இருந்த பாடசாலை வளவு, வலி. வடக்குப் பிரதேச சபையால் துப்புரவும் செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் மக்கள் மீள் குடியமர்வு நடைபெற்ற பின்னர், மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை திருத்தி அமைக்கப் பட்டது. 40 லட்சத்து 32 ஆயிரம் ரூபா செலவில் பாடசாலை முற்றாகப் புதிதாகப் புனர் நிர்மாணம் செய்யப் பட்டது.


2012 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை புனர் நிர்மாணம் செய்யப்பட்டு இதுவரையில் மீள ஆரம்பிக்கப்படாமலேயே இருந்து வருகின்றது. இந்தப் பாடசாலைக்குரிய அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால், பாடசாலை மீள இயங்காத நிலையிலேயே இருந்து வந்தது. இதனால் அருகிலுள்ள மாணவர்கள் தொலைவிலுள்ள வேறு பாடசாலைகளுக்கே கற்றல் நடவடிக்கைகளுக்குச் சென்று வந்தனர்.

இது குறித்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதனை அடுத்து குறித்த பாடசாலைக்கு, கல்வித் திணைக்களம் அதிபரை மாத்திரம் நியமித்துள்ளது.

மேலும் பாடசாலை புனரமைக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக இயங்காத நிலையில் இருந்தமையால், குறித்த பாடசாலையைச் சுற்றி பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. அவற்றை வலி. வடக்குப் பிரதேச சபை துப்புரவு செய்து கொடுப்பதற்கு இணங்கியுள்ளது.

விரைவில் இந்தப் பாடசாலையை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (வ-5)

### யாழ். நகரில் விற்பனைக்கு இப்போது 'கடுகுடா' பழம்



யாழ்ப்பாணம், ஜூலை 31

நுவரெலியா மற்றும் மலையகப் பகுதிகளில் பிரபலமான 'கடுகுடா' பழம் யாழ்.நகரில் விற்பனைக்கு வந்துள்ளது. குலைகளாகக் காணப்படும் இந்தப் பழங்கள் 50 பழங்கள் நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-135)

# காரைநகருக்கு மிக விரைவில் தனியான பொலிஸ் நிலையம்

## வடமாகாண பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

காரைநகர், ஜூலை 31

காரைநகர் பிரதேசத்துக்கென தனியான பொலிஸ் நிலையம், ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக வடமாகாண பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ் தெரிவித்துள்ளார்.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் அமைக்கப்படவுள்ள நுழைவாயில் பெயர் வளைவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் பழைய மாணவர் சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலைத் திறப்பு விழாவும் அவரது நிதியுதவியில் அமைக்கப்பட இருக்கும் நுழைவாயில் பெயர் வளைவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் திங்கட்கிழமை கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

காரைநகருக்கான பொலிஸ் நிலையம் தற்போது ஊர்காவற்றுறையிலேயே இயங்கி வருகிறது. இதனால் மக்கள் கடல் கடந்து வருவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற இந்தப் பகுதியில் பொலிஸ் நிலையம் இல்லாதது பெரும் குறையாக உள்ளதாக இங்கு எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு எனது மட்டத்தில் தீர்வு காண முடியாவிட்டாலும் உடனடியாக கொழும்பு தலைமையகத்துக்கு இதனைத் தெரியப்படுத்தி இங்கு மிக விரைவில் பொலிஸ் நிலையமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன், காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வே.ஆனைமுகன், பிரதேச சபை உறுப்பினர்களான ப.பாலச்சந்திரன், வீ.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-250)

# எதிர்காலத்தில் கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் முழுநாளும் சேவை

## உடுப்பிட்டி சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ்.மாவட்ட பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிப்பு

எதிர்காலத்தில் பெறப்படும் வருமானத்தின் அடிப்படையில் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தை 24 மணி நேரமும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளரால் யாழ். மாவட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபன பொது முகாமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்தை 24 மணி நேரமும் திறந்து பயணிகளுக்கு சேவை வழங்க வேண்டும் என்று உதயன் பத்திரிகை யில் செய்தி வெளிவந்திருந்தது.

அதற்கு விளக்கமளிக்கும் வகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபன பொது முகாமையாளருக்கு உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தை 24 மணி நேரமும் திறந்து வைப்பதில் பின் வரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. குறித்தஎரிபொருள் நிரப்பு நிலையம் வல்லை வெளிக்கு அண்மையில் அமைந்திருப்பதால் சனநடமாட்டம் இல்லாதிருப்பதால் பாதுகாப்பற்ற தன்மையுள்ளது.

24 மணி நேரமும் எரிபொருள் நிரப்பு நிலையத்தைத் திறப்பது என்றால் தற்போது கடமையாற்றும் ஊழியர்களை விட இரண்டு மடங்கான ஊழியர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். இதற்கு இரவு 9 மணி முதல் காலை 5 மணிவரை விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் போதுமானதாக அமையாது.

எமது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு 4 கிலோமீற்றர் தூர இடைவெளியில் நெல்லியடி -கட்டைவேலி ப.நோ. கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ளது. இது நெல்லியடியில் பாதுகாப்பான சூழலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இருந்தும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் எமது எரிபொருள் நிலையத்தை அதிகாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எதிர் வரும் காலங்களில் இரவு நேரங்களில் கிடைக்கும் வருமானத்தைப் பொறுத்து 24 மணி நேரமும் நிலையத்தைத் திறந்து வைக்கச் சங்கம் தயாராக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-108)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தனித்துப் போட்டியிடும் விமல் பதவி துறக்கத் தயாரா?

ராஜபக்ஷ அரசின் சில நடவடிக்கைகளை சமீபகாலமாக விமர்சித்துவந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான விமல் வீரவன்ஸ ஊவா மாகாணசபைத் தேர்தலில் தனது கட்சி தனித்துப் போட்டியிடும் என்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவித்துள்ளார்.

அரசின் பங்காளிக் கட்சிகள் நடத்திய மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமை, கட்சியின் அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் 12 அம்சத் திட்டம் அடங்கிய கோரிக்கை தயாரித்து ஜனாதிபதியிடம் கையளித்தமை வரிசையில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் அவரது அறிவிப்பு வெளிவந்துள்ளது. அரசிலிருந்து இக்கட்சி விலகுமா, மஹிந்த அரசில் வெறுப்படைந்திருக்கும் மற்றொரு பங்காளிக் கட்சியான ஹெலஉறுமயவுடனும் தனித்து இயங்கும் ஜே.வி.பியுடனும் கூட்டுச் சேருமா, ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வெற்றியீட்டிய பின்பு கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் செய்தது போன்று மீண்டும் அரசிடம் சரணடையுமா என்பவை விடைகாண இயலாத கேள்விகளாக உள்ளன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை விமல் வீரவன்ஸ தனித்து இயங்கினால் என்ன, ஜே.வி.பி. - ஹெல உறுமயவுடன் இணைந்தால் என்ன, மீண்டும் அரசிடம் சரணாகதி அடைந்தால்தான் என்ன, தமிழ் மக்களுக்கு அதனால் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை. ஏகாதி பத்திய எதிர்ப்பு என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை, நியாயமான கோரிக் கைகளை விமல் வீரவன்ஸ தொடர்ந்து எதிர்க்கவே போகிறார். பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன்களை மையப்படுத்தியே அவரது நடவடிக்கைகள் அமையும்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விமல் வீரவன்ஸ பேசுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பங்காளிக் கட்சிகளை மதிப்பதில்லை என்று குற்றஞ்சாட்டினார். தமது 12 அம்சத் திட்டத்தை அரசு கவனத்தில் எடுக்காதது குறித்து ஏமாற்றம் தெரிவித்தார். சிறுபான்மைத் தேசிய இனங்களின் செல்வாக்குக்கு உட்படாத சிங்கள, பௌத்த அரசே விமல் வீரவன்ஸவின் கனவு. அவரது கடந்தகால நடவடிக்கைகள் இதற்குச் சான்று.

போர்க்குற்ற விசாரணை நடத்த சர்வதேச விசாரணைக் குழுவை நாட் டுக்குள் அனுமதிக்கக்கூடாது.

பிராந்திய ஒருமைப்பாடு, நல்லாட்சி ஏற்படுத்தப்பட வேண்டும்; மக்களின் ஜனநாயக உரிமைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் மீண்டும் திருத்தம் செய்வது குறித்தோ, அதனை முழுமையாக செயற்படுத்துவது குறித்தோ எந்த ஓர் அதிகாரம் மிக்க அல்லது அதிகாரமற்ற கட்சியுடனோ அரசுடனோ பேச்சு நடத்தக்கூடாது.

பிராந்திய ஒருமைப்பாடு, தேசிய நல்லிணக்கம், நல்லாட்சி, மக்களின் ஜனநாயக உரிமைகளை விரிவுபடுத்தல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

நாட்டின் இறைமையைப் பாதிக்கக்கூடிய அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நாட்டின் அரசமைப்புக்கு விரோதமாகப் பிரிவினை வாதத்தைத் தூண்டும் சக்திகள், இலங்கைக்கு எதிரான சர்வதேச அமைப்புகள் குறித்து நாட்டின் சட்டங்கள் கடுமையாக செற்படுத்தப்பட வேண்டும்.

மேற்கண்டவை தேசிய சுதந்திர முன்னணியின் 12 அம்சத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள் அம்சங்களாகும்.

கடந்த மே 15 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் வருடாந்த மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஜூன் 16ஆம் திகதி அலரிமாளிகையில் வைத்து இந்த 12 அம்சத்திட்டம் அமைச்சர் விமல் வீரவன்ஸவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று ஜனாதிபதி அப்பொழுது உறுதியளித்தார். எனினும் எந்த ஓர் அம்சமும் பரிசீலனை செய்யப்படமில்லை; செயற்படுத்தப்படவுமில்லை.

விமல் வீரவன்ஸ அரசின் மீது கடுமையாக அதி ருப்தி கொண்டுள்ளதற்கு ஜனாதிபதியால் நியமிக் கப்பட்ட மூவர் அடங்கிய சர்வதேச நிபுணர் குழுவே பிரதான காரணமாகும். உள்நாட்டு விவகாரத்தில் வெளித்தலையீட்டை எதிர்த்து வருகிறார் விமல் வீரவன்ஸ. ஆனால் இன்றைய நிலைக்கு அரசின் பங்காளிக் கட்சி என்ற ரீதியில் வீரவன்ஸவுக்கும் பொறுப்புண்டு. ராஜபக்ஷ அரசின் இனவாத அரசியலில் அவரும் ஒரு பங்காளி.

அமைச்சரவையில் தொடர்ந்து இருப்பீர்களா என்று நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்டபோது, ஜனாதிபதிதான் முடிவுசெய்யவேண்டும் என்று வீரவன்ஸ பதிலளித்துள்ளார். ஊவா மாகாணசபைத் தேர்தலில் தனித் துப் போட்டியிடுவதற்கு வீரவன்ஸவினால் தனித்து முடிவெடுக்கமுடியுமானால் அமைச்சர் பதவி குறித்து அவரால் ஏன் முடிவெடுக்க முடியாது? அதற்கு ஏன் ஜனாதிபதியை எதிர்பார்க்கவேண்டும்? துணிவிருந்தால் அதனை அவர் செய்து காட்டட்டும்.

# மாற்றங்களை உருவாக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தல்

சேரலாதன்

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் இலங்கையிலுள்ள அனைவரதும் கவனத்தை ஈர்த்துக் கொண்டுள்ளமைக்குப் பல்வேறு காரணங்களைக் கூற முடியும். அரசியல் சாசனத்தில் தமது விருப்பத்துக்கு ஏற்றாற்போன்று திருத்தங்களை மேற்கொண்ட தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நாட்டின் சம்பிர தாயங்கள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கப் போகின்றார். இனிமேல் தமது இறுதிக் காலம்வரை அவர் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தடைகள் இருக்கப் போவதில்லை.

ஆனால் கடந்த காலங்களைப் போலன்றி அவர் தற்போது பெருமளவு சவால்களுக்கு முகம்கொடுத்து வருவதைக் காண முடிகின்றது. தெற்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கு இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் மஹிந்தர் தலைமையிலான ஆளும் கட்சி பின்னடைவுகளைச் சந்தித்தது. அதன் வாக்கு வங்கியிலும் இறங்குமுகம் தெரிந்தது. மேலும் குடும்ப ஆட்சி, அதிகார துஷ்பிரயோகங்கள், பொருளாதார வீழ்ச்சி, ஜனநாயகமற்றதொரு சூழ்நிலை என்பன ஆளும் வர்க்கத்தினர் மீதான மக்களின் வெறுப்புக்குக் காரணங்களாக மாறி விட்டன. ஒரு ஜனநாயக நாட்டுக்குத் தேவையற்ற வகையிலான நிறைவேற்று அதிகாரங்களைத் தற்போதைய ஜனாதிபதி தம்வசம் கொண்டுள்ளார். ஒரு நாட்டின் உயிர்நாடியாகத் திகழும் நீதித்துறை இலங்கையைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியின் முன்னால் மண்டியிட்ட நிலையில் காணப்படுகின்றது. நீதிமன்றங்களின் கடமைகளில் ஜனாதிபதி சர்வசாதாரணமாகத் தலையிடக் கூடியதொரு நிலைமைதான் இங்கு காணப்படுகின்றது. நீதிமன்றமொன்றினால் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரை ஜனாதிபதி தமது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி விடுவிக்க முடியும். ஒரு காலத்தில் ஜனாதிபதியின் பரமவைரியாகக் கருதப்பட்டு நீதிமன்றமொன்றினால் தண்டனைக்குள்ளாக்கப்பட்ட இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஜனாதிபதியின் காலடியில் வீழ்ந்ததால் மன்னிப்பு வழங்கப்பட்டுசிறையிலிருந்து வெளியே வந்தார். இன்று அவர் ஜனாதிபதியின் புகழ்பாடும் ஒருவராகவே மாறிவிட்டார். இவ்வாறு இன்னும் பல உதாரணங்களை இங்கு கூற முடியும். ஆகவே நீதித்துறையே செயலிழந்து போயுள்ள நிலையில் வேறு துறைகள் தொடர்பாகக் கூறுவதில் பயனொன்றும் ஏற்படப்போவதில்லை.

இதேவேளை அண்மையில் கொழும்பில் சந்திப்பொன்றை நடத்திய அரசுக்கு எதிரான கொள்கையுடைய முக்கியஸ்தர்கள் ஜனாதிபதியிடம் உள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பறிக்க வேண்டுமென தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரங்களை எடுத்து விட்டால் ஜனாதிபதிப் பதவி என்பது செல்லாக் காசாகி விடும் என்பதைக் கூறத் தேவையில்லை. அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுவதற்கு எவருமே விரும்பமாட்டார்கள். இதனால் அந்தப் பதவி ஒழிக்கப்பட்டு நாடாளுமன்ற ஆட்சிமுறை மீண்டும் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிடும்.



இவையெல்லாம் ஒரு புறமிருக்க ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுமாயின் எதிரணியின் சார்பில் போட்டியிடுவதற்குத் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அரசியல்வாதியுமான சரத்பொன்சேகா ஆகியோருடன் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவும் இந்த விடயத்தில் கவ னத்தை ஈர்த்துள்ளனர்.

தொடர்த் தோல்விகளால் துவண்டு போயிருக்கும் ரணில் இனியும் மோத நினைப்பது பயனைத்தராது என்பதே பெரும்பாலோரின் கருத்தா கும். மேலும் புலிகளை உடைத்துப் பலவீனமாக்கியவர் என்ற பழிச்சொல் இன்னமும் தமிழர்களின் மனங்களில் மறையாது இருப்பதால் ரணிலுக்கு அவர்களின் ஆதரவு கிடைக்கப் போவ தில்லை.

திருமதி சந்திரிகா ஜனாதிபதிப் பதவிக்கு வருவதற்கு முன்னர் உதிர்த்த வார்த்தைகளும் கண்ணீரும் தமிழ் மக்களைக் கவர்ந்ததால் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு அறுபது சதவீத வாக்குகளுக்கும் மேலாகப் பெற்று அவரால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது. ஆனால் இறுதியில் தாம் பண்டாரநாயக்கவின் மகள் என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். ஆகவே அவருக்குத் தமிழ் மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள்.

சரத்பொன்சேகா யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்த வேளையிலும், இராணுவத் தளபதியாக இறுதிப் போரின்போது செயற்பட்ட போதும் மிகப்பெரிய பாதிப்புக்கள் தமிழ் மக்களுக்கு ஏற் பட்டன என்பதை எவருமே மறுக்க முடியாது. மேலும் இறுதிப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற வெள்ளைக்கொடி விவகாரத்தில் தமிழர்களை ஒரு பொருட்டாகக்கூட மதிக்காது அவர் நடந்து கொண்ட விதம் தமிழர்களின் மனங்களிலிருந்து ஒரு போதுமே அகலப்போவதில்லை. ஒரு பெரும்பான்மையின பௌத்தர் என்ற வகையில் தமிழ் மக்களுக்கெதிராக அவர் ஆற்றிய உரைகளும் தமிழர் மனங்களை நோகடித்திருந்தன. ஆகவே இவரையும் தமிழ் மக்கள் கருத்தில் கொள்ளமாட்டார்கள். இந்த நிலையில் ஷிராணி பண்டாரநாயக்க மட்டுமே தமிழர் மனதில் இடம்பெறுகிறார். இவர் இதற்கு முன்னர் அரசியலில் ஈடுபட வில்லை என்பதுடன் தமிழர் விரோதக் கருத்துக்களையும் உதிர்க்கவில்லை. மேலும் ஒரு கௌரவமான பதவியில் அமர்ந்திருந்தவர் என்பது இவருக்குள்ள மேலதிகத் தகைமையாகும். அரசியலுக்குள் வந்த தன் பின்னர் இவர் எவ்வாறு மாறிவிடப் போகின்றார் என்பதை இப்போதே கூறிவிட முடியாது. ஆகவே இப்போதைய நிலையில் அரசியலைப் பொறுத்தளவில் இவர் ஒருவரே அப்பழுக் கற்ற ஒருவராகக் காணப்படுகின்றார்.



ஜனாதிபதி பதவிக்கு சிறுபான்மை இனத்தவர் ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத வகையில் இனவாதிகள் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். இதன் காரணமாகவே வெற்றி பெறும் ஒருவர் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டுமென்ற விதி உருவாக்கப்பட்டது. வாக்குகளின் அடிப்படையில் அல்லாமல் வாக்குவீதம் என்ற அடிப்படையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இந்த ஐம்பது சதவீத வாக்குகளைப் பெரும்பான்மை இனத்தவர் ஒருவராலேயே பெற்றுக்கொள்ள முடியும். ஏனென்றால் சிறுபான்மையினத்தவர்கள் ஜனாதிபதியாக வருவதை பெரும்பான்மை மக்கள் ஒரு போதுமே விரும்பமாட்டார்கள். ஆனால் சிறுபான் மையினரின் வாக்குகள் வெற்றி தோல் வியைத் தீர்மானிக்க் கூடியவை. கடும்போட்டியொன்று இடம்பெறுமாயின் இந்த வாக்குகள் முக்கியமான பங்கொன்றினை வகிக்கக்கூடியவை.

ஆகவேதான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் முக்கியத்துவம் பெறப் போகின்றன. ஆனால் இங்கும் சுயநல சக்திகள் உள்ள நிலையில் அவர்கள் மனம் மாறுவார்களென எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் இவர்கள் தமது இனத்தைவிட தமது சுயநன்மைகள் மீதே நம்பிக்கை கொண்டவர்கள்.

எதிர்காலத்தில் ஜனநாயகக் கோட்பாடுகளை மதிக்கின்ற நிறைவேற்று அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதி முறை மலரவேண்டும் என்பதே இந்த நாட்டில் வாழுகின்ற பெரும்பாலான மக் களின் பெரு விருப்பமாகும்.

# வடமாகாண கைத்தொழில் கண்காட்சி - 2014

வடமாகாண கைத்தொழில் கண்காட்சி இன்றும், நாளையும் இடம்பெறுவதை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

வடமாகாண தொழில்துறைத் திணைக் களத்தால் முன்னெடுக்கப்படும் செயற் றிறன் மிக்க நடவடிக்கைகளில் வருடந்தோறும் நடத்தப்படும் கைத்தொழில் கண்காட்சியும் ஒன்றாகும். இந்தக் கண்காட்சி கைப்பணிப் பொருள்கள் கண்காட்சி, கைத்தறி உற்பத்திகள் கண்காட்சி என இருபெரும் பிரிவுகளாக நடத்தப் படுகின்றது. இந்தக் கண்காட்சி கைப்பணித் துறை, கைத்தறி நெசவுத்துறை சார்ந்தவர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும், அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகை யிலும், வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குட னும் நடத்தப்படுகின்றது. அந்த வகையில் இந் தக் கண்காட்சி மாகாண மற்றும் தேசிய ரீதி யிலும்நடத்தப்பட்டுஅவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

கைப்பணி தொடர்பான கண்காட்சிக்கு எந்த வகையான பொருள்கள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் என்பது தொடர்பான தேசிய அருங் கலைகள் பேரவையின் விளக்க அறிவுறுத்தல் களும் தேசிய புடைவைக் கைத்தொழில் திணைக் களத்தின் கைத்தறி தொடர்பான அறிவுறுத்தல் களும் வடமாகாண தொழில்துறை திணைக்கள அலுவலர்களால் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வழங் கப்படுகின்றது. வடமாகாணத்தில் உள்ள 5 மாவட் டங்களிலும் உள்ள பிரதேச செயலகங்களில் கட மையாற்றும் தொழில்துறை திணைக்கள அபி விருத்தி உத்தியோகத்தர்களால் குறிப்பிட்ட பிர தேசத்தில் உள்ள கைவினைஞர்களை இனங் கண்டு அவர்களின் பின்வரும் வகைகளின் கீழ் உள்ள ஆக்கங்களை மாகாண மட்டக் கண் காட்சியில் காட்சிப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றது.

கைத்தறி நெசவு உற்பத்திகள், களிமண் உற் பத்திகள், தும்பு- -ஓலை -புல் சார்ந்த உற்பத் திகள், தும்பறை வடிவங்கள் (சணல், பருத்தி), பிரம்பு மூங்கில் சார்ந்த உற்பத்திகள், உலோக கைப்பணிப் பொருள்கள், ஆபரணங்கள் (உலோக, கற்பதித்த, நானாவித ஆபரணங் கள்), முகமூடிகள் மற்றும் பாவைகள், செதுக்கிய முகங்கள், சங்கீத உபகரணங்கள், துணிகள் மற்றும் துணிகளிலான கைப்பணிப் பொருள்கள் (தையல் எம்புறொயிடர், இயந்திர எம்புறொயிடர், துணிகளில் வர்ணம், பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு), பற்றிக் (Batik), ரேந்தை, வெண்கல மற்றும் சேசத், மர உற்பத்திப் பொருள்கள், தோல் பொருள்கள், கற்கள் மூலம் கைப்பணிப் பொருள்கள், பாரம்பரியக் கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை- பனை சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருள்கள் (கடதாசிப் பொருள்கள், பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருள்கள், சிப்பி, ஓடுகள், பலதரப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருள் கள்), நினைவுச் சின்னங்கள்.

இவை தேசிய அருங்கலைகள் பேரவை, புடவைக் கைத்தொழில் திணைக்களம் என்பவற் றின் மத்தியஸ்தர்கள் மூலம் தரமான ஆக்கங் கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் கைப்பணிப் பொருள்கள் தேசிய அருங்கலைகள் பேரவையால் தேசிய மட்டத்தில் நடத்தப்படும் சில்ப கண்காட்சியிலும், கைத்தறிப் பொருள்கள் புடைவைக் கைத் தொழில் திணைக்களத்தால் தேசிய ரீதியில் நடத் தப்படும் கைத்தறி உற்பத்திக் கண்காட்சியிலும் காட்சிப்படுத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் பெறுமதிமிக்க பணத் தொகையும் வழங்கப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கைத்தொழில் கண்காட்சியில் மாகாண மட்டத்தில் 14 வகை யான கைப்பணிப் பொருள்கள் காட்சிப்படுத் தப்பட்டு அதில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**தேசிய மட்டக் கண்காட்சி- 2013**
முதலாம் இடம்- 3
இரண்டாம் இடம்-1
ஆறுதல் பரிசு-9

**மாகாண மட்டக் கண்காட்சி-2013**
முதலாம் இடம்-29
இரண்டாம் இடம்-29
மூன்றாம் இடம்-28
ஆறுதல் பரிசு-78

**தேசிய மட்டத்தில் பரிசில் பெற்றோர் பெயர் விவரம் :**

| கைப்பணியாளர் பெயர் | கைப்பணியின் வகை | கைப்பணியின் வடிவம் |
|---|---|---|
| **முதலாம் இடம்** | | |
| 01. ஜே.பி.ஜெயலட்சுமி | பனை ஓலை சார்ந்த உற்பத்திகள் | பெரிய கைப்பை |
| 02. எஸ்.மகாலிங்கம் | பனை ஈர்க்கு சார்ந்த உற்பத்திகள் | சுளகு |
| 03. எஸ்.சற்குணராசா | பாரம்பரிய சங்கீத உபகரணங்கள் | மேளம் |
| **இரண்டாமிடம்** | | |
| 04.கே.உஷாநந்தினி | தென்னை, கித்துள்,எள்ளு, பனை சார்ந்த உற்பத்திகள் | சுளகு |
| **ஆறுதல் பரிசு** | | |
| 05. ரி.எஸ்.எம்.ஜே.பெரேரா | சிப்பி ஓடுகள் சார்ந்தவை | வண்ணத்துப்பூச்சி |
| 06. ஏ.அன்ரன்குஞ்ஜே | | டீல்செற் |
| 07. வி.சோமேஸ்வரி | பாரம்பரிய விழா சார்ந்த உபகரணங்கள் | மகரதோரன |
| 08. ரி.ரதி | மர உற்பத்தி பொருள்கள் | இடியப்ப உரல் |
| 09. உ.சசிக்குமார் | இயந்திர எம்புறொயிடர் | சாறி பிளவுஸ் |
| 10. எஸ்.அமரசிங்கம் | பாரம்பரிய சங்கீத உபகரணங்கள் | நாதஸ்வரம் |
| 11. பி.பிரஜி | கற் சிற்பங்கள் | பிள்ளையார் சிலை |
| 12. எஸ்.பாஸ்கரன் | கற் செதுக்கல்கள் | வைரவர் சிலை |
| 13. எஸ்.பாஸ்கரன் | | அம்மன் சிலை |

மேலும் திணைக்களத்தால் நடத்தப்படும் கைப்பணிக் கண்காட்சியில் பங்குப கைவினைஞர்கள் தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் கட மாக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் மாவட்ட ரீதியில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்க விவரம் வருமாறு:-

**பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்கள் விவரம்- 2014**
யாழ்ப்பாணம்-305
முல்லைத்தீவு-107
மன்னார்-73
வவுனியா-124
கிளிநொச்சி-10

தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப் கைப்பணியாளர் சங்கங்களின் விவரம் வருமாறு:-

| இல. | மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட கைப்பணியாளர் சங்கங்கள் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 02 | | நீர்வேலி கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 03 | | யாழ்ப்பாணம் செப்பு புடைப்பு சித்திர கைப்பணி அபிவிருத்திச் சங் |
| 04 | | சண்டிலிப்பாய் பனை சார் கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 05 | | சரசாலை கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 06 | | இளவாலை சென்.ஜேம்ஸ் கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 07 | வவுனியா | வவுனியா கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 08 | | மாரவிலுப்பை கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 09 | | மதியமடு கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 10 | | ஓமந்தை பெண்கள் கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 11 | மன்னார் | மன்னார் மடுமாதா வவுனியா கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 12 | | நறுவிழிக்குளம் கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 13 | | முருங்கன்பிட்டி கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 14 | | மன்னார் கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 15 | முல்லைத்தீவு | முல்லைத்தீவு கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |
| 16 | கிளிநொச்சி | கிளிநொச்சி கைப்பணி அபிவிருத்திச் சங்கம் |

இந்தக் கண்காட்சியை நடத்துவதன் மூலம் கைவினைஞர்களின் ஆற்றல்கள் வெள கொணரப்படும். அதேவேளை அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு தேசிய ரீதியில் சந்ை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடியத மூலம் திணைக்களத்தால் ஒரு சிறந்த சேவையை வழங்கக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் இந்த வருடம் இன்றும், நாளையும் யாழ்.மத்திய கல்லூரியில் வடமாகா மாபெரும் கைத்தொழில் கண்காட்சி நடைபெறவுள்ளது. கைப்பணி மற்றும் கைத்தற பொருள்களின் காட்சிப்படுத்தல்களுடன் அவற்றின் உற்பத்தி செயன்முறைகள் என்பனவும் கா பிக்கப்படவுள்ளன. மேலும் மலிவான விலையில் தரமான உள்ளூர் உற்பத்திப் பொருள் களைக் கொ வனவு செய்யவும் முடியும். அனைவரையும் தவறாது கண்காட்சியைப் பார்வையிட்டு பய பெறுவதுடன் எமது பிரதேச கைப்பணியாளர்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

**தொழில்துறை திணைக்கள**
**வடமாகாண**

# தொடர்க தமிழியலாய்வு

இல.நிசாந்தன்,
யாழ்.இந்துக் கல்லூரி

*29.05.2014 அன்று உதயன் பத்திரிகையில் வெளியான மொழியின் மாற்றம் விரும்பத்தக் கதே என்ற தலைப்பில் வெளியான கட்டுரை தொடர்பானது.*

இந்தக் கட்டுரை தமிழில் தவறாகப் பயன்படுத்தப்படும் "ர்" என்றதொரு தமிழ் நெடுங்கணக்கில் இல்லாத எழுத்தைப் பற்றிய ஆய்வாக நீண்டு அதைப் பயன்படுத்தலாம் என்றும் அதைப் பயன்படுத்துவதில் என்ன தவறு என்றும் நீண்டு முடிவாக அதைப் பயன் படுத்துவது மொழியின் வளர்ச்சிக்கான மாற்ற மாக கட்டுரை ஆசிரியரால் முன்மொழியப்பட் டுள்ளது. எனவே இது பற்றிய சில நியாயங் களை அல்லது காத்திரமான விமர்சனத்தை முன்வைப்பதும் அவசியமானதே.

அந்த வகையில் நெடுங்கணக்கில் 247 எழுத் துக்கள் புழக்கத்திலிருந்து வருவது யாவரும் அறிந்த விடயம். அதில் "ர்" என்றதொரு எழுத்து இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வாறெனின் புழக்கத்தில் இல்லாத ஒன்றை நாம் எவ்வாறு ஒரு எழுத்தாகப் பயன்படுத்த முடியும்? அப்படி " u ;" என்றதொரு எழுத்துக்குப் பதிலாக "ர்" பயன்படுத்துவது எழுத்துக்களின் பரிணாம வளர்ச்சியின் ஓர் அங்கமாகக் கொண்டால். நடைமுறையில் சில சிக்கல்களையும் நாம் முகங்கொள்ள நேரிடும்.

தமிழ் மொழியில் உள்ள 247 எழுத்துக்களும்

| | | |
|---|---|---|
| உயிர் | - | 12 |
| மெய் | - | 18 |
| உயிர்மெய் | - | 216 |
| ஆய்தம் | - | 1 |

எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இதில் உயிர் 12 உம், மெய் 18 உம் ஆகிய 30 எழுத்துக் களுமே முதல் எழுத்துக்களாக அதாவது மூல ஒலியன்களாகக் கொள்ளப்படுகின்றன. இதில் மெய் எழுத்துக்களோடு உயிர் எழுத்துக்கள் கூடியே 216 எழுத்துக்கள் உருவாகின்றன. இதனடிப்படையில் இந்த விடயத்தை அணுகு கின்றபோது "ர்" என்ற எழுத்தைப் பயன்படுத்தும் நிலையில்தான் நடைமுறை பிரச்சினை எழும் நிலையை நாம் உணர முடியும்.

உதாரணமாக "த" என்றதொரு உயிர்மெய் எழுத்தை எடுத்துக் கொண்டால் அது "த்" என்ற மெய்யெழுத்தோடு "அ" என்ற உயிரெழுத்துச் சேர்ந்தே "த" என்ற உயிர் மெய் ஓசையைத் தருகின்றது. அதாவது த் + அ= த

இது போன்றே "லௌ" என்ற உயிர் மெய் எழுத்தை எடுத்துக் கொண்டால்
ல் + ஔ = லௌ என அமையும்.
இதனடிப்படையில் நோக்கின்
u ; + அ = ர என்றும்
u ; + ஆ = ரா என்றும் அமையும்.

மாறாக "u ;" என்ற மெய்யின் மறு வடிவ மாக "ர்" எனும் வழக்கில்லாத இவ்வெழுத்தை வழக்காகக் கொள்கின்ற போது
ர் + அ = ா (ர ஓசை) என்றும்
ர் + ஆ = ாா (ரா) என்றுமே எழுத வேண்டி வரும்.
"ஊல" என்பதை "லை" என்றும் "ஊன" என்பதை "னை" என்றும் ர என்பதை ரு என்றும் சீர்திருத்தும் போது நடைமுறைச் சிக்கல்கள் எழுந்திருக்காமையை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

"u ;" என்பதற்குப் பதிலாக "ர்" பயன்படுத்து வதை நாம் புழக்கத்துக்கு சிக்கல்களின்றிக் கொண்டு வர வேண்டுமெனின் தமிழ் மொழி யில் உயிர்மெய் என்ற கூட்டொலி வடிவத்தை நீக்கி தமிழ் மொழியில் 31 எழுத்துக்களைப் புழக்கத்தில் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் ஆங்கில மொழியின் உச்சரிப்புப் பொறிமுறையை தாய்மொழியாகிய தமிழ் மொழிக்குத் திணிப்பு நிலையில் கொண்டு வர வேண்டும்.

உதாரணமாக சிவன், முருகன் என்ற உயிர் மெய் எழுத்துக்களின் பயன்பாட்டோடு உள்ள சொற்களை உயிர்மெய் என்ற எழுத்து வடிவத்தை இல்லாது நீக்கி ஆங்கில மொழி போல் எழுதினால்
முருகன் என்றும் = ம்உர்உக்அன் என்றும்
MURUKAN (ஆங்கிலம்)
சிவன் என்றும் = ச்இவ்அன் என்றும் வரும்
SIVAN (ஆங்கிலம்)

இப்படியொரு மொழிச் சீர்திருத்தம் கணினி யுகத்தில் தமிழைப் புகுத்துவதற்கு மிகவும் சுலபமானதாக அமையும். ஆயினும் தமிழ் மரபை, அதன் வரலாற்றுத் தொன்மையை, செம்மொழித் தகைமையை பாதிக்காது. அது ஏற்றத்திற்கானதொரு மாற்றம் என்று கருதி நடைமுறைக்குக் கொண்டு வந்ததால் அப் பொழுது "u ;",ர் என்ற பிரயோகத்தால் தவறேதும் இருக்கப்போவதில்லை என்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

மேலும் மதிப்பிற்குரிய யாழினி அவர்கள் முன்வைத்துள்ள கிரந்த ,எழுத்துக்களி பயன்பாடு, சிங்கள மொழியில் மேலும் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டமை, தமிழிலும் பு எழுத்துக்கள் சேர்க்கப்படுவது அவசியம் எ கருத்துக்களும் சிந்தித்தற்குரியவை. இ விடயங்கள் தமிழ்மொழி தமிழின வரல போன்ற வரலாறுகளை நிலைக்களனா கொண்டு தெளிவுபடுத்த வேண்டிய விடய நான் கருதுவதாலும் எழுதிய இந்தக் கட்டு யின் நோக்கத்தை அல்லது பிரதான விடய வேறு திசைக்குத் திருப்பி விடும் என்பத இந்தக் கட்டுரையில் இதற்கான தெளிவு தலை நான் எழுதவில்லை என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைய நிலையில் இப்படியொரு கரு களத்தை உதயன் பத்திரிகையின் வாசக முன்வைப்பது எமது சமூகத்தின் புதிய தனைப் போக்கை வெளிப்படுத்துவ உள்ளது. வாழ்த்துக்கள் தொடரட்டும் ழியலாய்வு.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். செலவு கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்கும். கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் கவனமாக எதையும் செய்வது நன்மையைத் தரும்.



**இடபம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம் முடிவில் எதிர்பார்த்தபடி காரியம் முடியும். சக ஊழியர்கள் ஆதரவும் இருக்கும். குடும்ப விடயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்ப்பது நன்மை தரும்.



**மிதுனம்**: உறவினர், நண்பர்களிடம் கவனமாகப் பேசி பழகுவது நல்லது. பணவரவு திருப்தி தரும். மதிப்பும், மரியாதையும் கூடும். மனதில் புது திட்டங்கள் உருவாகும். புதிய தொடர்புகளால் நன்மை உண்டாகும்.



**கடகம்**: புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். ஆனால் அவர்களிடம் திறமையாகப்பேசி தக்க வைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய தொழிலில் முதலீடு செய்யும்போது கவனம் தேவை.



**சிங்கம்**: வியாபாரம், தொழில் மூலம் உண்டாகும் செலவுகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய தொழிலில் முதலீடு செய்யும் போது கவனம் தேவை.



**கன்னி**: வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் கூறும் கருத்துகளுக்கு எதிர்த்து பேசுவதை விட்டுவிட்டு நிதானமாக உங்கள் கருத்தைச் சொல்வது நன்மை தரும். புதிய எண்ணங்கள் உண்டாகும்.



**துலாம்**: புதிய நபர்கள் கூறும் வியாபாரம் தொடர்பான விடயங்களில் முடிவு எடுக்கும்போது கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கும். உங்களது பணியால் மேலதிகாரிகள் திருப்தி அடைவார்கள்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாகப் பேசும் சூழ்நிலை ஏற்படும். கவனமாக இருப்பது நல்லது. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை.



**தனுசு**: எந்த காரியத்திலும் முடிவு எடுக்கும் முன்பு தீர ஆலோசிப்பது நல்லது. சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். எந்த ஒரு வேலையிலும் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உங்களுடன் பக்கபலமாக ஒருவர் இருந்து தேவையான உதவிகளைச் செய்வார்.



**மகரம்**: தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். தேவையான பணவசதி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புகளும் அதனால் வருமானமும் இருக்கும். எதிர்ப்புகள் அகலும்.



**கும்பம்**: கல்வியில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனமகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும். கடன் சுமை குறையும். எதிர்ப்புகள் அகலும். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்யத் தோன்றும்.



**மீனம்**: தொழில், வியாபாரத்தில் கடினமான முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்த இலாபம் வந்து சேரும். போட்டிகள் குறையும். புதிய வாடிக்கையாளர்களால் திருப்தி ஏற்படும். கடன் தொல்லைகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பதவிகள் தாமதமாக கிடைக்கும்.

## நாளை

**ஆடி-16 வெள்ளிக்கிழமை | 01.08.2014**

திதி: பஞ்சமி பி.ப.12.59 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ.05.42 வரை

சுபநேரம்: 06.03-07.33 வரை
இராகுகாலம்: 10.33-12.03 வரை
ஷஷ்டி விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## மூன்று குணங்களையும் கடந்து செல்ல வேண்டும்

வேதங்களின் மூலம் பிரமத்தை நீங்கள் காண இயலாது. நீ பிரமமாகவே இருக்கிறாய். எமது கண்களிலிருந்து உண்மையை மறைக்கும் திரையை அகற்றுவதற்குத்தான் வேதங்கள் உதவுகின்றன. அறியாமை என்னும் திரையே முதலில் அகற்றப்பட வேண்டிய திரை. அறியாமை அகலும்போது பாவங்களும் அகன்று விடும். அதன் பிறகு ஆசை நின்று விடுகிறது. சுயநலம் இல்லாமல் போகிறது. அதனால் எல்லாத் துயரங்களும் முடிந்து போகின்றன. கடவுளும் நானும் ஒன்று என்பதை அறியும்போதுதான், அறியாமை இல்லாது போகிறது. வேறு விதமாகச் சொன்னால்,ஆன்மாவுடன் உன்னை ஒன்றுபடுத்திக்கொள்; மனிதனுக்குள்ள வரையறைகளுடன் உன்னை ஒன்றுபடுத்திக் கொள்ளாதே. உடலுடன் ஒன்றுபடுத்திக் கொள்வதை நிறுத்திவிட்டால் எல்லாத் துயரங்களும் தீர்ந்து போகும். சமாதானத்துக்கான ரகசியம் இதுவே. மயக்கத்தின் விளைவே பிரபஞ்சம். மயக்கத்தை விலக்கிக்கொள், துன்பங்கள் நீங்கிவிடும்.

முக்தியடைய, பாவத்திலிருந்து புண்ணியத்துக்குச் சென்று, பிறகு பாவம் புண்ணியம் இரண்டையும் விட்டுவிட வேண்டும். ரஜோ குணத்தால் தமோ குணத்தை அகற்ற வேண்டும். பிறகு சத்வ குணத்தால் மற்ற இரு குணங்களையும் அமிழ்த்திவிட வேண்டும். இதன் பின்னர் மூன்று குணங்களையும் கடந்து செல்ல வேண்டும். பிரார்த்தனையே மூச்சாக அமையும் ஒரு நிலையை நீஎய்த வேண்டும். பிறர் கூறும் சொற்களிலிருந்து ஏதாவது நீ கற்க நேர்ந்தால், அது முற்பிறப்பில் உனக்கு நேர்ந்த அனுபவம் என்பதைத் தெரிந்துகொள். ஏனெனில், அனுபவமே குருவாகின்றது.

ஆற்றல்களைத் தொடர்ந்து வருவது புதிய துன்பங்களே. எனவே ஆசையைக் கொன்றுவிடு. ஆசையை நிறைவேற்ற முற்படுவது, குளவிக் கூட்டுக்குள் கோலை விடுவதற்கு ஒப்பாகும். ஆசைகள் தங்க முலாம் பூசிய நச்சுருண்டைகள் என்பது தெரியும் போது தான் வைராக்கியம் பிறக்கிறது.

# விண்கல்லின் தாக்கத்தாலேயே டைனோசர் இனம் முற்றாக அழிந்தது



விண்கல்லின் தாக்கம் காரணமாகவே பூமியில் டைனோசர் இனம் முற்றாக அழிந்ததாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தாக்கத்தால் ஏற்பட்ட கடல்மட்ட உயர்வு மற்றும் எரிமலைக் குமுறல் காரணமாக டைனோசர்களின் பல வகையான இனங்கள் அழிவடைந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில மில்லியன் வருடங்களுக்குப் பின்னரோ அல்லது முன்னரோ விண்கல்லின் தாக்கம் ஏற்பட்டிருந்தால் டைனோசர் இனம் பூமியில் அழியாமல் இருந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பெரிய துரதிர்ஷ்டம் என்று டைனோசர்கள் குறித்து ஆய்வு செய்த பிரிட்டனின் எடின்பேர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஸ்டிபன் ப்ரஸேட் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டன், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த டைனோசர்கள் தொடர்பான 11 முன்னணி நிபுணர்கள் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 7 | | | | 3 |
| 8 | 7 | 3 | 9 | | 5 | | | |
| 2 | | 5 | | 8 | 4 | 6 | 9 | 7 |
| | | | | | | 9 | 1 | |
| | 5 | | | | | | 8 | |
| | 2 | 4 | | | | | | |
| 5 | 6 | 1 | 7 | 9 | | 2 | | 8 |
| | | | 5 | | 1 | 3 | 6 | 9 |
| 3 | | | | 2 | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 8 | 5 | 4 | 3 | 9 | 7 | 1 |
| 1 | 7 | 4 | 9 | 6 | 8 | 3 | 2 | 5 |
| 9 | 5 | 3 | 1 | 2 | 7 | 6 | 8 | 4 |
| 5 | 2 | 1 | 7 | 9 | 6 | 8 | 4 | 3 |
| 7 | 8 | 9 | 3 | 1 | 4 | 5 | 6 | 2 |
| 3 | 4 | 6 | 8 | 5 | 2 | 7 | 1 | 9 |
| 4 | 9 | 7 | 6 | 3 | 1 | 2 | 5 | 8 |
| 6 | 1 | 5 | 2 | 8 | 9 | 4 | 3 | 7 |
| 8 | 3 | 2 | 4 | 7 | 5 | 1 | 9 | 6 |

# தேசிய மட்ட விளையாட்டிலும் இனவாதம் கலந்துவிட்டதா?

## இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி

வலி வடக்கு, ஜூலை 31

தேசிய மட்ட விளையாட்டுக்கள் என்றாலே அதில் இனவாதம் கலந்துவிட்டதோ என அச்சப்படத் தோணுகின்றது என சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்நாடாளுமன்ற உறுப்பினர்க.உஷாந்தன்தெரிவித்தார்.

வலி தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் சார்பில் 26ஆவது மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய இளைஞர்களுக்கான கௌரவிப்பு நேற்று முன்தினம் மாலை மானிப்பாய் பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில்,

வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்புக்கள் முக்கியமானவை. அவை வீரர்களை உற்சாகப்படுத்துவதோடுஅடுத்த இலக்குகள் நோக்கி நகர வைப்பவை.

பல நல்பண்புகளை எம்மிடத்தே பழக்கப்படுத்தும் விளையாட்டுகளுக்குள்ளும் இனவாதம் புகுந்து விட்டதோ என எண்ணும் காலம் வந்துவிட்டது. அண்மையில் கம்பஹாவில் வைத்து யாழ் மாவட்ட இளைஞர் கிரிக்கெட் அணி மீது மேற்கொள்ளப்பட்ட வேண்டத்தகாத மனிதப் பண்புகளுக்கப்பாற்பட்ட நடவடிக்கைகள் இதையே காட்டுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவை என்பதுடன் தண்டிக்கப்படவும் வேண்டியவை.

கடந்த வருடம் இடம்பெற்ற 25ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்று தந்த உதைபந்தாட்ட அணியினை போன்று இவ்வருடமும் நாங்கள் பதக்க வேட்டை நடத்த வேண்டும்.

தேசிய மட்டப் போட்டிகளில் நாங்கள் பார்வையாளர்களாக இருந்த காலம் போய் பதக்கங்கள் பெறுகின்ற காலம் வந்துவிட்டது.

இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கலாம். அதற்காக எமது வெற்றிகளை நாம் இழந்து விடமுடியாது.

வெற்றிகள் என்பதற்கப்பால் விளையாட்டு உணர்வுகளை மதிப்பவர்களாக என்றைக்கும் நாம் இருக்கவேண்டும். இடம்பெறப்போகின்ற தேசிய மட்ட 26ஆவது இளைஞர் விளையாட்டுவிழாவில் சாதிக்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார். (த-86)

## மெய்வன்மைப் பயிற்சி முகாம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில்

கிளிநொச்சி, ஜூலை 31

இலங்கை மெய்வன்மைச் சங்கம், கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்து வீர, வீராங்களைகளுக்கான பயிற்சிமுகாம் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி பயிற்சி முகாமில் 30 வீர, வீராங்களைகள் பங்குபற்றவுள்ளனர் இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை மெய்வன்மைச் சங்கதிலிருந்து வருகை தரும் சுகத் திலரட்ண குழுவினர் வழங்கவுள்ளனர். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 31

முல்லைத்தீவு புதுகுடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுகுடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு யங்கஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பேராறு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 31

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இந்தியாவில் நடைபெறும் கபடி பிறீமியர் லீக் போட்டிக்கு மட்டக்களப்பு இளைஞன் தெரிவு



கணேசராஜா சினோ தரன்

மட்டக்களப்பு, ஜூலை 31

இந்தியாவின் மாபெரும் கபடி பிறீமியர் லீக் போட்டிக்கு இலங்கையை பிரதி நிதித்துவப்படுத்துவதற்காக மட்டக்களப்பு புளியந்தீவு கல்லடித் தெருவில் இருந்து கணேசராஜா சினோதரன் என்ற இளைஞன் தகுதி பெற்று இந்தியா சென்றுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டில் இந்தியன் பிறிமியர் லீக் போன்று கபடி விளையாட்டில் கபடி பிறீமியர் லீக் போட்டிக்கு இலங்கையில் இருந்து ஒரே ஒரு வீரர் அதுவும் மட்டக்களப்பு புளியந்தீவு கல்லடித் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது மண்ணுக்கும், தேசத்திற்கும் கிடைத்த மாபெரும் பெருமை.

மட்டக்களப்பு, புளியந்தீவு கல்லடித் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட வறிய குடும்பத்தைச் சேர்ந்த கணேசராஜா சினோதரன் கபடி விளையாட்டின் மூலம் இலங்கைத் தேசிய அணியில் இடம்பிடித்து தற்போது இந்தியாவில் இடம் பெறும் கபடி பிறீமியர் லீக் போட்டிக்கு தகுதிபெற்ற ஒரே ஒரு இலங்கையர்.

கிரிக்கெட் விளையாட்டுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கும் எமது நாட்டில் கபடி விளையாட்டுத் துறையைத் தேர்ந்தெடுத்து அதில் மாவட்ட, மாகாண ரீதியில் பல சாதனைகளைப் படைத்து தற்போது இந்நாட்டில் எத்தனையோ வீரர்களுக்கு மத்தியில் இந்தியன் நிறுவனம் ஒன்றினால் பல இலட்சம் பெறுமதியில் கபடி பிறீமியர் லீக் போட்டிக்காக பெங்களூர் புள்ஸ் அணி சார்பில் இந்தியாவிற்கு செல்வதற்கு இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது அவரின் விளையாட்டுத் திறனுக்கு கிடைத்த மாபெரும் சன்மானம். (த)

## பருத்தித்துறை பிரதேச செயலகம் பெண்கள் கிரிக்கெட்டில் அசத்தல்



சம்பியன் பெற்ற அணியினர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் துடுப்பெடுத்தாட முடிவு செய்தனர்.

அவர்கள் முதலில் துடுப்பெடுத்தாடி ஒரு இலக்கினை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் அனுலா 22 ஓட்டங்களையும், தர்சினி ஆட்டம் இழக்காமல் 22 ஓட்டங்களையும், சுகிர்தா ஆட்டம் இழக்காமல் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி சார்பில் அபிராமி ஒரு இலக்கினைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 4.1 பந்துப் பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 23 ஓட்டங்களைப் பெற்று 41 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. இதில் கலையரசி 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சார்பில் சுகிர்தா 2 இலக்கினையும், அஜித்தா, தர்சினி, அனுலா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றியிருந்தார்கள். (த-23)

## துள்ளுகுடியிருப்பு சென். மேரிஸ் சம்பியனானது கரப்பந்தாட்டத்தில்

மன்னார், ஜூலை 31

ஜனாதிபதி தங்க வெற்றிக் கிண்ணத்துக்காக மன்னார் கரப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய ஆண், பெண் இருபாலாருக்கமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரு பிரிவிலும் துள்ளுகுடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

கடந்த வாரம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் துள்ளுக்குடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆண்டான்குளம் சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் துள்ளுக்குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் துள்ளுகுடியிருப்பு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கவயன்குடியிருப்பு ஏஞ்சல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் துள்ளு குடியிருப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

# மல்யுத்த களத்தில் ஆதிக்கம் செலுத்திய இந்திய வீரர்கள்



பொதுநலவாய மல்யுத்தப் பிரிவில், இந்திய வீரர்கள் அதிரடியாக 3 தங்கப் பதக்கங்கள் உட்பட 10 பதக்கங்களை வென்றுள்ளனர்.

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவரான சுஷில்குமார், 75 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றார். மற்றொரு இந்திய வீரர், அமித்குமார் 57 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். மகளிர் பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகாட் தங்கப் பதக்கம் வென்றார். 125 கிலோ எடைப்பிரிவில், ராஜீவ் தோமர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

சுஷில் குமார், 4 சுற்றுகளிலும் எளிதாக வென்றார். இறுதிச் சுற்றில், பாகிஸ்தானைச் சேர்ந்த கவுமர் அப்பாஸுடன் மோதிய சுஷில், இரண்டு நிமிடங்களுக்குள், 8-0 என்ற வித்தியாசத்தில் வென்றார். இதேபோல, தனது பிரிவில் கடைசி சுற்றில் நைஜீரிய வீரரை சந்தித்த அமித்குமார், 6-2 என்ற கணக்கில் வென்றார். முதல் 4 சுற்றுகளை எளிதாக வென்ற அமித்குமாருக்கு, அடுத்த இரண்டு சுற்றுகளில் கடும் போட்டியாக நைஜீரிய வீரர் இருந்தார். இருப்பினும் முதல் 4 சுற்றுகளை வென்றதால், இந்தியாவுக்கு தங்கம் உறுதியானது.

125 கிலோ எடைப் பிரிவில் விளையாடிய ராஜீவ் தோமரால், தனது போட்டியாளரான கனடா வீரரை வீழ்த்த முடியாமல் போனது. இதனால் அவருக்கு வெள்ளிப் பதக்கமே மிஞ்சியது.

மகளிர் மல்யுத்தப் போட்டியின், 48 கிலோ பிரிவில், இந்தியாவின் வினேஷ் போகாட், இங்கிலாந்தின் யானா ரட்டிகனை சந்தித்தார். முதல் சுற்றில் சற்று தடுமாறினாலும், அடுத்த சுற்றுகளில் திறம்பட விளையாடி 11-8 என்ற வித்தியாசத்தில் தங்கம் வென்றார். இவற்றோடு சேர்த்து, இந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில், இந்தியா இதுவரை மொத்தம் 36 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் 10 தங்கம், 15 வெள்ளி மற்றும் 11 வெண்கலப் பதக்கங்கள் அடக்கம்.

## கோஹ்லிக்கு ஆலோசனை

இந்திய அணியின் இளம் அதிரடிவீரரான விராட் கோஹ்லிக்கு ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவரும், வர்ணணையாளருமான இயன் சப்பல் ஆலோசனை கொடுத்துள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கோஹ்லி தொடர்ந்து ஸ்லிப் திசையில் பிடி கொடுத்து ஆட்டமிழந்து வருகிறார். அவரது துடுப்பாட்டம் குறித்து சப்பல் அலசியுள்ளார்.

இந்தத் தொடரில் கோஹ்லி 5 இன்னிங்ஸ்களில் 73 ஓட்டங்களே எடுத்துள்ளார். சராசரி 15 ஓட்டங்களுக்கும் கீழ் உள்ளது. கோஹ்லி எப்போதும் ஓட்டங்கள் எடுக்கவேண்டும் என்று முனைப்பாக இருப்பதால் ஓப் ஸ்டம்பிற்கு வெளியே செல்லும் பந்துகளை அதிகம் ஆடாமல் விட்டுவிடுவது இல்லை. இதனால் அடித் தேர்வில் தவறுகள் நிகழ்ந்து விடுகிறது.

பந்துகள் பவுன்ஸ் அதிகமாகும் ஆடுகளங்களில் அவர் பின்னாங்காலில் சென்று இடுப்புக்கு மேல் உயர்ந்து வரும் பந்தை ஆடும்போது டிரைவ் ஆட முயல்வது கூடாது. காரணம் பந்து மட்டையின் விளிம்பில் பட்டு கல்லி, அல்லது 3ஆவது ஸ்லிப்பில் பிடி ஆகும். அல்லது உடலுக்கு அருகில் நெருக்கமாக அத்தகைய பந்துகள் வரும்போது கோஹ்லி ஆடும் டிரைவ் அடிகள் மட்டையின் விளிம்பில் பட்டு இலக்குக் காப்பாளர் அல்லது ஸ்லிப்பில் பிடி ஆகிறது.

மேலும், பந்துகள் இடுப்பளவு உயரம் வரும்போது பின்னங்காலில் சென்று டிரைவ் ஆடுவது இந்திய ஆடுகளங்களில் பலனளிக்கலாம். ஆனால் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் உள்ளபவுன்ஸ் ஆடுகளங்களில் அவர் ஸ்கொயர்கட், புல் போன்ற மட்டையை படுக்கை வசமாக வைத்து ஆடும் அடிகளையே அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். (கு)

## மிஸ்பா தலைவராக நீடிப்பார்



பாகிஸ்த்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் நியமனம் தொடர்பாக கடந்த சில நாள்களாக சர்ச்சை நீடித்து வந்தது. இந்த பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், 2015 இல் உலகக்கிண்ண போட்டி முடியும் வரை மிஸ்பா உல் ஹக்கை தலைவராக நீடிக்க கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

தலைவர் பிரச்சினை தொடர்பாக அணியில் சூழ்ச்சி மற்றும் அரசியல் இருந்ததாக கூறிய கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேத்தி, ஊடகங்கள் கூட சிலருக்கு ஆதரவாக பிரசாரம் செய்ததாக குறிப்பிட்டார்.

தலைவர் தொடர்பான அரசியல் மற்றும் நிர்வாக பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மிஸ்பா உலகக்கிண்ணம் வரை தலைவராக தொடர முடிவெடுத்ததாகவும் அவர் கூறினார்.

சமீபத்தில் அணியின் தலைமை தேர்வாளர் மற்றும் மேலாளரான மொயின் கான் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய போது, மிஸ்பாவின் தலைவர் பொறுப்பு குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாகவும், தலைவரை மாற்றுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் கூறினார். பின்னர் அதனை மறுத்த மொயின் கான், தலைவர் பதவி தொடர்பான சர்ச்சையைப் பற்றியே இவ்வாறு பேசியதாக சமாளித்தார். (கு)

## இசாந்த் அணிக்கு விரைவில் திரும்புவார் - சகீர்கான்




கணுக்காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கெதிரான மூன்றுவது டெஸ்ட் ஆட்டத்தில் சேரக்கப்படாமல் உள்ள இசாந்த் சர்மா காயத்தில் இருந்து மீண்டு இத் தொடரின் 4ஆவது போட்டியில் விளையாடமுடியும் என நம்புவதாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சகீர்கான் தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனம் ஒன்றின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய சகீர்கான், இசாந்த் சர்மாவுக்கு ஏற்பட்டிருக்கும் காயம் மிகப் பெரிய விடயமல்ல. அவரால் இத் தொடரின் ஏனைய ஆட்டங்களில் பங்குபற்ற முடியும். அவர் சிறந்த முறையில் விளையாடி வருகிறார். லோர்ட்ஸ் டெஸ்டில் சிறப்பாகப் பந்து வீசியிருந்தார். அவர் காயத்திலிருந்து விரைவில் குணமடைந்து இத் தொடரின் ஏனைய போட்டிகளில் விளையாடுவார் என நம்புகிறேன் எனத் தெரிவித்திருந்தார்.

லோர்ட்ஸ் டெஸ்டில் இறுதி நேரத்தில் இந்திய அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்த இசாந்த் சர்மா நடைபெறும் 3ஆவது ஆட்டத்தில் காயம் காரணமாக விளையாடவில்லை என்பதும் இந்திய பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்து அணியின் இலக்குகளைக் கைப்பற்ற முடியாமல் திணறி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி சுடுதலில் குவியும் பதக்கங்கள்




பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு மொத்தம் 17 பதக்கங்கள் (4 தங்கம், 9 வெள்ளி, 4 வெண்கலம்) கிடைத்துள்ளன. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் சுஞ்சீவ் ராஜ்புத், ஹர்ப்ரீத் சிங் வெள்ளிப் பதக்கத்தையும், ககன் நரங், மானவ் ஜீத் சிங், லஜ்ஜா கோஸ்வாமி ஆகியோர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவருக்கான 50 மீற்றர் ரைபிள் 3 பொசிஷன்ஸ் துப்பாக்கி சுடுதல் போட்டியில் சுஞ்சீவ் ராஜ் புத் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவருக்கான 25 மீற்றர் ரேபிட் பயர் பிஸ்டல் பிரிவில் ஹர்ப்ரீத் சிங்குக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

லண்டன் ஒலிம்பிக்கில் 10 மீற்றர் எயார் ரைபிள் பிரிவில் வெண்கலம் வென்ற ககன் நரங். 50 மீற்றர் ரைபிள் 3 பொசிஷன்ஸ் பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார். இவர் டில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

பறக்கும் இலக்கை சுடும் ஆடவருக்கான டிராப் பிரிவில் மானவ் ஜீத் சிங் மற்றும் மான்ஷெர் சிங் பங்கேற்றனர். அரையிறுதியில் மொத்தம் 15 இலக்குகளில் 13 இலக்குகளை சரியாகச் சுட்டு 3ஆவது இடம்பிடித்தார் மானவ் ஜீத். அடுத்த சுற்றில் அவர் ஆஸ்திரேலியாவின் மைக்கேல் டைமண்டை தோற்கடித்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

மகளிருக்கான 50 மீற்றர் ரைபிள் 3 பொசிஷன்ஸ் பிரிவில் லஜ்ஜா கோஸ்வாமி மூன்றாவது இடம் பிடித்து வெண்கலம் வென்றார். (கு)

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் காலிஸ்



கடந்த வருடம் டெஸ்ட் ஆட்டங்களில் ஓய்வை அறிவித்து மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டங்களில் மட்டும் விளையாடிவரும் தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜாக்ஸ் காலிஸ் சரவதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

2015 உலகக் கிண்ண ஆட்டங்களில் விளையாட வேண்டும் என்ற எனது கனவுக்கான தூரம் வெகு தொலைவிலுள்ளது என்பதை இலங்கைக்கெதிரான தொடரில் விளையாடும் போது உணர்ந்தேன். தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கும், எனது அணிக்கும், அணியினதும் எனதும் விளம்பரதாரர்கள், ரசிகர்கள் மற்றும் எனது கிரிக்கெட் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று அவர் தெரிவித்தார். அத்துடன், தான் முற்று முழுதாக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவில்லை என்றும், சிட்னி தண்டர் அணிக்காக மேலும் இரண்டு ஆண்டுகள் விளையாடுவேன் என்றும், வாய்ப்புக்கள் கிடைத்தா[illegible] கொல்கத்தா அணியின் சாம்பியன் பட்டம் நிலைப்பதற்கு உதவுவேன் என்றும் தெரிவித்தார்.

166 டெஸ்ட் போட்டிகளில் 13,289 ஓட்டங்களையும் 292 இலக்குகளையும், 328 ஒரு நாள் போட்டிகளில் 11, 579 ஓட்டங்களையும் 273 இலக்குகளையும், 25 இருபதுக்கு இருபது போட்டிகளில் 666 ஓட்டங்களையும் 12 இலக்குகளையும், பெற்றுள்ளார். டெஸ்ட் ஆட்டங்களில் 10,000 ஓட்டங்களைக் கடந்த ஒரேயொரு தென்னாபிரிக்க வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊக்கமருந்து வீராங்கனை சிகா அமலஹா இடைநீக்கம்

மகளிருக்கான பளுதூக்குதல் போட்டியின் 53 கிலோ எடைப் பிரிவில் நைஜீரியாவைச் சேர்ந்த சிகா அமலஹா தங்கப் பதக்கம் வென்றார். இந்திய வீராங்கனை மட்சா சந்தோஷி வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார். தற்போது, சிகா அமலஹா தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்துள்ளது.

இது குறித்து காமன்வெல்த் போட்டிகளின் ஒருங்கிணைப்புக் குழு முதன்மை செயல் அதிகாரி மைக் ஹூப்பர் கூறுகையில் முதல் கட்டச் சோதனையில் அமலஹா ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்துள்ளது. அடுத்த சோதனை முடிவு வரும் வரை பொதுநலவாயப் போட்டிகளில் இருந்து அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்' என்றார்.

அடுத்த முடிவும் அவருக்கு எதிராக இருக்கும் பட்சத்தில் அவரது தங்கப் பதக்கம் பறிக்கப்படும். இதனால், இந்தியாவின் சந்தோஷிக்கு வெள்ளிப் பதக்கமும், இப்போட்டியில் நான்காவது இடம்பிடித்த ஸ்வாதி சிங்குக்கு வெண்கலப் பதக்கமும் கிடைக்க வாய்ப்புள்ளது. (கு)

## British College of English
பிரித்தானிய ஆங்கிலக் கல்லூரி

**IELTS** [Highest pass rate in Jaffna]
**General English**
**Spoken English**
**I-ESOL**
IELTS Registration Centre
City & Guilds APPROVED CENTRE
British College
Smart teachers ,bright tomorrow
0777302882
**Business English (with presentation skills)**

படிமுறை ரீதியில் அமைந்த கற்கை நெறிகள்,மாணவரின் நிலைக்கேற்ற கல்வி நெறியை தெரிவு செய்ய வசதி செய்கிறது. 16 வருட அனுபவமுள்ள முழு நேர இங்கிலாந்து பட்டதாரி ஆசிரியர்கள் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம். எமது மாணவர்களின் வெற்றிக்கதைகளை இணையத்தில் காணுங்கள் : http://edu.kugroup.info/

**BCE@Knowledge Unvierse**
No 626,1/1,K.K.S Road, Jaffna.021-3208342


## மனோகரா, ஞானமுருகன் ஆட்டங்களில் அசத்தல்

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணிமன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம். இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணி களின் விவரங்கள்.

மனோகரா விளையாட்டுக்கழக அணிக்கும் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் கலட்டி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)



## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணிபுரிந்துவரும் **சோமசுந்தரம் நிமலரூபன்** அவர்களின் அன்புத் தந்தை புதுவீதி, காரைநகரைச் சேர்ந்த

**ஆறுமுகம் சோமசுந்தரம்**

30.07.2014 அன்று மரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தார், உறவினர்களுக்கு எமது கண்ணீர் காணிக்கையை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.** () (10.6) **சுப்ப சூஸ் உரிமையாளர்களும், ஊழியர்களும்**


## மலேசியாவில் Work Permit உடன் வசிக்க/தொழில்புரிய அரிய வாய்ப்பு

மூன்று வருட Work Permit அடிப்படை சம்பளம் 40,000/=, வயது 19-35 வரை, 8 மணித்தியால வேலை, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவம் இலவசம், 02.08.2014 சனிக்கிழமை Tilko Jaffna City Hotel, 70/6, K.K.S. Road, Jaffna வில் மலேசிய முகவர்களால் நேர் முகத் தேர்வு இடம்பெறும். இலங்கை அரசாங்கத்தி னால் அனுமதிக்கப்பட்டது. இரண்டே வாரத்தில் பயணம்.

**இன்றே பதிவு செய்யுங்கள்**
**தொடர்பு: 077 3957291** (48955) (10.6)


## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை தர்மலிங்கம்



யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவை வதிவிடமாகவும், இல.32, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை தர்மலிங்கம் 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பார்வதி, பூரணம்,மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கருணாகரன், தவனேஸ்வரி (முன்னாள் ஆசிரியர்- யாழ். புங்குதீவு, கணேசா மகா வித்தியாலயம்) மற்றும் கனகேஸ்வரி (கனடா)-முன்னாள் ஆசிரியர், கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபன், சாரதாதேவி மற்றும் தயாபரன் (கனடா), தயாஜினி (கனடா) ஆகியோரின் மாமியும், சுதன்-கஜா (பிரான்ஸ்), கஜானா, பிரசன்னா, டயானா, தர்சன், ஆரதி, ஆரூசன், ஷகீஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.32, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.** (50443)(10.6.3)

**தகவல்:கிருபாகரன்**
**(மகன்-கனடா)**
**077 236 3537**

## மரண அறிவித்தல்



### அருளையா ஐசக் இன்பராஜா

நவாலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளையா ஐசக் இன்பராஜா (29.07.2014) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளையா, இன்பமலர் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், தேவமலரின் (முன்னாள் தாதி, கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்) அன்புக் கணவரும், கௌதமனின் (பொறியியலாளர்-SENOK Wind Power (Pvt) Ltd) அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆனந்தம், மேரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அருள்மலர் மற்றும் தேவமலர், நேசமலர் (ஆசிரியை-மானிப்பாய் மகளிர் கல்லூரி), பியூலா (ஆசிரியர்-நவாலி YMCA), அதிசயராஜா (ஆசிரியர்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) ஆகியோரின் அருமைச் சகோதரனும், ஜேசுரட்ணம் (முன்னாள் ICRC உத்தியோகத்தர்-வவுனியா), ஜோன்பப்ரிஸ்ட் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) கமலினி (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாட சாலை) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொ.இ: 077 404 8387** (50473)(10.6) **தகவல்: கௌதமன் (மகன்)**

ஐயனார் துணை

## அனலைதீவு–நயினாகுளம் கூழாவடியுறை
## அருள்மிகு பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலய
## வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா விஞ்ஞாபனம்–2014



**கொடியேற்றம் 01.08.2014** **தேர்த்திருவிழா – 09.08.2014**

விழாக்கால நிகழ்வுகள் :

31.07.2014 வியாழன் மாலை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்
01.08.2014 வெள்ளி முதலாம் திருவிழா பகல் 12 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்)
மாலை யாகபூசை,சுவாமி வலம் வருதல்
02.08.2014 சனிக்கிழமை இரண்டாம் திருவிழா மாலை பூச்சொரியும் உற்சவம்
03.08.2014 ஞாயிற்றுக்கிழமை 3ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், மாலை வேதபாராயணத் திருவிழா
04.08.2014 திங்கள் 4ஆம் திருவிழா பகல் விஷேட திரவிய அபிஷேகம், விஷேட திரவிய ஹோமம், பகல் பக்தி முத்தி பாவனோற்சவம்
05.08.2014 செவ்வாய் 5ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், மாலை வசந்தோற்சவம்
06.08.2014 புதன் 6ஆம் திருவிழா பகல், இரவு கைலாச வாகனம்
07.08.2014 வியாழன் 7ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், இரவு வேட்டைத் திருவிழா
08.08.2014 வெள்ளி 8ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம், சந்தன அலங்காரம், மாலை சப்பைரத உற்சவம்(சப்பறத்திருவிழா)
09.08.2014 சனி 9ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல் மஹா அபிஷேகம், (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை
10.08.2014 ஞாயிறு 10ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா காலை 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம், (கொடியிறக்கம்) சண்டேஸ்வரர் உற்சவம்,ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும்.
11.08.2014 திங்கள் 11ஆம் திருவிழா பகல் நவகலச அபிஷேகம் மாலை திருக்கல்யாண உற்சவம்
12.08.2014 செவ்வாய் மாலை வைரவர் பொங்கல்

**பகல் திருவிழா**

| | |
|---|---|
| காலைப் பூசை | 07.00 மணி |
| கும்ப பூஜை | 08.30 மணி |
| விசேட பூஜை | 10.30 மணி |
| தம்ப பூஜை | 11.00 மணி |
| வசந்த மண்டப பூஜை | 11.30 மணி |
| சுவாமி வீதி வலம் வருதல் | 12.00 மணி |

**மாலைத் திருவிழா**

| | |
|---|---|
| அபிஷேகம் (உருத்திர கும்பம்) | 05.00 மணி |
| விஷேட பூஜை | 06.00 மணி |
| தம்ப பூஜை | 06.30 மணி |
| பஜனை | 07.00 மணி |
| மேளக்கச்சேரி | 07.30 மணி |
| வசந்தமண்டப பூஜை | 08.30 மணி |
| வீதி வலம் வருதல் | 10.00 மணி |

**அடியார்கள் யாவரும் தங்களால் இயன்ற வகையில் பால் தயிர், இளநீர் போன்ற அபிஷேகப் பொருள்களையும், பூக்கள் போன்றவற்றையும் ஆலயத்தில் கொடுத்து திருவிழா சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்

'அனைவரும் வருக' ஐயன் அருள் பெறுக !!
'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்'

அனலைதீவு – 05

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.

(39644)(5.6)

# மரண அறிவித்தல்

## தம்பு ஆறுமுகம்

**(வயாவிளான் தெற்கு, வயாவிளான்)**

வயாவிளான் தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், மொன்றியல், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பு ஆறுமுகம் மொன்றியல் கனடாவில் 29.07.2014 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - மாணிக்கம்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், பன்னாலையைச் சேர்ந்த, காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சரஸ்வதி சுப்பிரமணியம் அவர்களின் அருமைச் சகோதரரும், குகதாசன், ரகுமதி, சிவமதி, கலைமதி, இந்துமதி, வைரவநாதன், சுந்தரதாசன், ஜெயதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலா, சிறீதேவன், புஸ்பநாதன், உத்தமகுமரன், சுதர்சினி, தர்ஷினி, துஷ்யந்தி ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்பு: 001 514 223 1594 (50466)(45.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# கூட்டம்

வரணி, ஜூலை 31

வரணி மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் புதிய நிர்வாக சபைகளைத் தெரிவு செய்யும் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்துகொள்வார் எனவும் பிரதேச மக்களை இந்தக் கூட்டத்தில் பங்குகொள்ளுமாறும் செயலாளர் கேட்டுள்ளார். (வ-122)

# பாடசாலைக்கு அமைக்கப்பட்ட மதில் கையளித்தல்

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு சுற்று மதில் அமைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் உரிய சுற்று மதிலை அமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய பாடசாலையின் பழைய மாணவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான நலன்விரும்பி தம்பு செல்வகுமார் கௌரவிக்கப்படவுள்ளார். தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (வ-122)

# சமய சந்நிதிகளில்

கொடிகாமம், ஜூலை 31

கொடிகாமம் மஹாலாவண்யா காளி அம்பாள் திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 13 தினங்கள் திருவிழா நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் 7 மணிக்கு மதுரகவி காரை எம்.பி. அருளானந்தத்தின் தெய்வீகப் பேருரைகள் இடம்பெறவுள்ளன. (வ)

◆◆◆

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.35 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

◆◆◆

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய ஆடி வேல் திருவிழா வருடாந்த பெருந்திருவிழா கடந்த 26 ஆம் திகதி பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 9ஆம் திகதி 3 மணிக்கு கிராமிய ஊர்வலம் ஆரம்பமாகி தெய்வானை அம்மன் திருத்தரிசனம் இடம்பெறும். மறுநாள் 10ஆம் திகதி தீர்த்த உற்சவம் இடம்பெறும். (வ-100)

# முன்பள்ளி விளையாட்டுவிழா

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் ஆனைக்கோட்டை உதயதாரகை முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் தெ.ப.வ.அ.கூ. சங்கத் தலைவர் அ.சரவணபவன் தலைமையில் முன்பள்ளிக்கு அருகிலுள்ள மைதானத்தில் இடம்பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி செல்வகுமாரி நேசரத்தினம் கலந்துகொள்வார். (வ-100)

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி



பண்ணாகம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி 29.07.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையா கிருஷ்ணமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாக் கியநாதன் மற்றும் அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காண்டீபன் (சுவிஸ்), முகுந்தன் (லண்டன்), ஜானகி, காலஞ்சென்ற காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலலிதா, கேதாரணி, ஜெகதீசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தினேஸ், திவ்வியன், திவீசன், காயா, அகல்யா, கேசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம். (50349) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை நடராசா

(ஓய்வுபெற்ற முகாமையாளர், பேக்கறி பண்/பரிஷ் ப.நோ.கூ.ச)



மாதகலைப் பிறப்பிடமகாவும் வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நடராசா நேற்று முன்தினம் (29.07.2014) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா-பாறுவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராசேஸ்வரியின் பாசமிகு கணவரும் சத்தியசீலி, சகுந்தலா(பிரான்ஸ்), சுமித்திரா(ஆசிரியை), சுகிர்தா, சிவலோஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும், இளங்குமரன் (பிரான்ஸ்), சுதாகரன் ஆகியோரின் மாமனாரும், தர்சன், சுவாதி, விஷ்வா, பிரவீன், பிருத்வீன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராமசாமி, கந்தசாமி, தர்மலிங்கம், கதிர்காமு(சின்னத்துரை), கனகம்மா, பாக்கியம், இலட்சுமி மற்றும் வல்லிபுரம், சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான புவனேந்திரராசா, புவனேஸ்வரி மற்றும் கடம்பேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காவல் வீதி, மாதகல். (50464)(5.6)

தகவல்: குடும்பத்தினர்.



# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் போடியார் முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி

(பங்கர் அப்பா)

(Ocean Wealth - சமுத்திர திரவியம் - உரிமையாளரும் பிரபல வர்த்தகரும்)

மலர்வு 22★11★1942 உதிர்வு 06★08★2008

ஒன்றாகி இரண்டாகி மூன்றாகி - வருடம்
ஆறாகி விட்டதே - எம் அண்ணலே
நீவிர் எமை நீங்கி- ஆனாலும்
நீர் இப்புவியில் வாழ்ந்த காலத்தில்
என்றென்றும் எம்முடனும் அயலோடும்
உறவோடும் அன்பரோடும்
அன்புடனும் பண்புடனும் பாசத்தோடும் நேசத்தோடும்
பழகி வந்த பாங்கு - வலம் வந்த நேர்த்தி
என்றுமே அழியாது - மறையாது
உங்கள் வழிகாட்டல் என்றும் எமது வளம்
உங்கள் நினைவு என்றென்றும் எமது பலம்



உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஊறணி, வல்வெட்டித்துறை.

(49707)(5.6.3)

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வானை அம்பலவாணர்

**(இளைப்பாறிய உதவி அதிபர்)**



தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை அம்பலவாணர் (இளைப்பாறிய உதவி அதிபர்) 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினவேல் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாதவன், இராஜரட்ணம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஜனியின் (லண்டன்) அன்புத் தாயாரும், அம்பிகைபாகனின் (லண்டன்) பாசமிகு மாமியாரும், கிரிதரனின் (லண்டன்) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, கோரியடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாதக்கடவை, தும்பளை,
பருத்தித்துறை.

(சி15273)
(12.3.6)

தகவல்: மகள், மருமகன்
(குடும்பத்தினர்)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவச்செல்வம் (வள்ளியம்மாள்) நல்லதம்பி



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொம்மந்தறையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிவச்செல்வம் (வள்ளியம்மை) நல்லதம்பி 29.07.2014 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கம்பர்மலையைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவலிங்கம்- இலச்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், மயிலியதனையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா- அபிராமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தருமராசா மற்றும் சிவராசா தேவராசா, துரைராசா, செல்வராணி, புஸ்பராணி, ஆனந்தராசா, தெய்வேந்திரராணி, அருந்தவராணி, இராசேந்திரராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், வதனகாந்தி, பூமணி, சந்திரவதனா, தாரணி, திலகநாதன், தவச்செல்வம், சாருலதா,ஜெயக்குமார், ரகு, கணேசதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், மதனராஜ், மதனரூபி, குகதாஸ், ஜெயப்பிரியா, காலஞ்சென்ற ஜெயதாஸ் மற்றும் கண்ணதாஸ் கலைநேசன், கலைமேனன், திசாந்தி, செந்தூரி,நிருஷா, நிதுஷன், தமிழ்ச்செல்வன், நிருஷனன்,ரம்மியா, சர்மியா,அனோஜினி, கோகுலன், சரவணன், கஜானன், கம்சாயினி, ஹரிசாயினி, ரதுசாயினி, முகுந்தன், நிரோகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றோசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மயிலியதனை இந்து மயாத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ராணி இல்லம்'
கொம்மந்தறை,வல்வெட்டித்துறை.

(49721)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே:077 365 9010

# கண்ணீர் அஞ்சலி



தர்மஜோதி வே.சிவநேஸ்வரன் அவர்களின்
பாசமிகு தாயார்

## வள்ளியம்மை வேலாயுதம்

கடந்த (30.07.2014) சிவபதமடைந்தார்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வெல்லன் கட்டட ஒப்பந்தகாரர்**
**மத்தொனி, கரவெட்டி.**

(50469)(7.6.3)

### வீடு வாடகைக்கு

யாழ். றக்கா வீதியில் பொஸ்கோ பாடசாலைக்கு
அருகில் 3 அறைகள் கொண்ட வீடு
வாடகைக்குண்டு.
தொடர்பு : 077 652 0905 (50472)(7.6.3)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 12.06.1943
மறைவு 01.07.2014

(திதி: சதுர்த்தி)


## அமரர் சின்னத்துரை துரைசிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உம்மை நினைவு கூரும்:
கமலராஜன் (கமல்-மகன்)
இந்திரகலா (இந்து-மருமகள்)
மற்றும் உறவினர்கள்.

வேம்படி முருகமூர்த்தி கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
(50471)(10.6)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் சோமசுந்தரம்

(சுந்தரம் ஸ்ரோர்ஸ், நெடுங்கேணி)

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் சிதம்பராமூர்த்தி கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் நேற்று (30.07.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை- நாகம்மா தம்பதியரின் மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், நிமலரூபன், நிர்மலரூபன் (லண் டன்), சுகன்யா (Instructor யாழ். பல்கலைக்கழகம்), திவ்வியா (உயர் தொழிநுட்ப கல்லூரி HNDA) ஆகி யோரின் அன்புத் தந்தையும், ஜெயராசாவின் (லக்சுமி பான்ஷி-யாழ்ப்பாணம்) அன்பு மாமனும், கணேசன் (கோபால்-நெடுங்கேணி), தனபாலன் (ஆஸ்திரேலியா), தில்லைநாதன் (ஜேர் மனி), சோதிநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், செல்வராசா செல்வரத்தினம், சிவலட்சுமி, பானுமதி, நாகேஸ்வரி, கிருஸ்ணவேணி, சிவ ஞானம், காலஞ்சென்ற சிவபாக்கியம் பரஞ்சோதி, தவமணிதேவி, கமலாதேவி திலகவதி, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஆறுமுகம், செல்வரத்தி னம், காலஞ்சென்ற சோமசுந்தரம், இராசையா ஆகியோரின் சகலனும், வைத்தி லிங்கம் மகாலட்சமி ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை முற் பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிதம்பராமூர்த்தி கேணியடி,
காரைநகர்.

(C/15602)(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
21.05.1948

விண்ணில்
01.08.2013

## ஆனந்தன் செல்வநாதன்

(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

*தலைமகனாய் தலைவனாய் தரணிபோற்றும் தந்தையாய்*
*நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே*
*நிலையாக நினைவுகளில் வாழுகின்ற நிலைதந்து*
*நிறைந்ததுவோ ஓராண்டு நித்தமும் மறவோமே!*
*நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெமை*
*என்றும் சிறப்புடனே வாழவைத்த அப்பாவே!*
*சென்றிடினும் வாழ்நாளில் எம்சிந்தையிலே வாழ்வீர்*
*என்றினி உங்கள் எழில்வதனங் காண்போம்!*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*22, கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தொடர்ச்சிகள்

### பாலத்தில்

இவ்வாறு 18 பேர் விழுந்து எழும்பிய பின்னரே அந்த வழியால் சென்ற சிலர் ஒயில் சிந்திய பகுதியை கல், மரக்குழைகளை இட்டு அடையாளப்படுத்தியுள்ளனர். அதன் பின்னர் யாரும் விபத்துக்குள்ளாகவில்லை. (ந-4)

### மன்னார்

அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெறும் அமர்வில் 22 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 60 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இறுதி நாள் மடுப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் அமர்வில் 7 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 45 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமர்வுகளில் காணாமற்போனோரின் உறவினர்கள் மாத்திரமல்லாமல், இறுதிக் கட்டப் போர் தொடர்பில் சாட்சியமளிப்பவர்களும் சாட்சியமளிக்க முடியும்.(ந-5)

### இலங்கை

லேயே இஸ்ரேலிலும் எமது நாட்டிலும்தான் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். தென்னந்தோப்புக்களில் இடைப்பயிர்களாக வாழை மரங்களும் கடுகுச் செடிகளும் செழிப்பாக வளர்த்தாலும் அந்தத் தோட்டங்களுக்கு தென்னந்தோப்புக்கள் என்றுதான் சொல்லுவோம். அதை விடுத்து வேறு பெயர்கள் கொண்டு அழைப்பதில்லை.

உலகில் பௌத்தர்களை இழிவுபடுத்தி கேவலப்படுத்துவதற்கான திட்டங்களையும், இங்கு மதக்கலவரங்களை தூண்டிவிடும் செயற்பாடுகளையும் நாடு பூராவும் இயங்கும் 400க்கும் மேற்பட்ட அடிப்படைவாத அமைப்புக்கள் மேற்கொண்டுவருகின்றன. தற்போது பௌத்தர்களுக்கு எதிரான செயற்பாடுகளே நாட்டுக்குள்ளும் சர்வதேசத்திலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மத ரீதியில் பௌத்தர்களை கொள்ளையடிக்கும் முயற்சிகள் வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன. எமது பிள்ளைகள் போதை வஸ்துக்கள் மற்றும் மதுபாவனை உட்பட ஒழுக்கக்கேடான பாதைகளில் பயணிக்கின்றனர்.

கொழும்பை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த போதை வஸ்துக்கள் இன்று கிராமங்களுக்கும் வியாபித்துள்ளது. சில அடிப்படைவாத குழுக்கள் அதனை திட்டமிட்டு சூட்சுமமாக முன்னெடுக்கின்றன. சர்வமத அமைப்புக்கள் என்பது ஒவ்வொருவரது தனிப்பட்ட தேவைகளுக்கான நிகழ்ச்சி நிரலுக்காக தயாரிக்கப்படுகின்றது. இதனால் பௌத்தர்களுக்கு எவ்வித நன்மையுமில்லை. எனவே நாம் பௌத்தர்களை பாதுகாக்கும் திட்டங்களை தயாரித்து வருகின்றோம்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-10)

### சர்வதேச

ருக்கும் சமனானதாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத் தும் ஆணைக்குழுவின் விடயப்பரப்பை அண்மையில் விஸ்தரித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக மூவரடங்கிய சர்வதேச நிபுணர்கள் குழுவை நியமித்திருந்தார்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராகச் செயற்படும் டெஸ்மன்ட டி சில்வா, இலங்கைக்குச் சார்பாக செயற்பட்டவர் என்றும், பாதுகாப்பு படைகளுக்கு ஆதரவாக பேசியவர் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அத்துடன், இவரின் பூர்வீகம் இலங்கை என்பதால் நம்பகத்தன்மை, பக்கச்சார்பு ஆகிய விடயங்கள் பற்றியும் தற்போது பல்வேறு கோணங்களில் சந்தேகங்கள் எழுந்துள் ளன.

"இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டிருப்பதனால் இலங்கை தொடர்பான விசாரணைக்குழுவுக்கு ஆலோசனைவழங்குவதற்கு நீங்கள் தகுதியற்றவர் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன. இது பற்றி உங்களது கருத்து என்ன?" என்று அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அதேவேளை, சர்வதேச நிபுணர் குழுவின் செயற்பாடு, இலங்கை மீதான ஐ.நா. விசாரணை பற்றிய அவரின் கண்ணோட்டம் உட்பட மேலும் பல கேள்விகளை மின்னஞ்சல் ஊடாக அவரிடம் தொடுத்திருந்தாலும், அவர் அவற்றுக்கு பதிலளிக்கவில்லை.

"ஐ.நா.வுக்கோ அன்றேல் தனிப்பட்ட அரசுகளுக்காகவோ பணியாற்றுகின்றபோது இறுதி அறிக்கை பூர்த்தியாகின்ற வரையில் நேர்காணல் எதனையும் வழங்குவதில்லை என்பது என்னுடைய வழமையாகும். நீங்கள் இதன் தேவையை நிச்சயமாக உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்" என்று பதிலளிக்காமைக்கு அவர் காரணம் கூறினார். (ந-சி)

### முதலமைச்சருக்கு

தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து கடந்த 28 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முதலமைச்சர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், பிரதம செயலாளர் விடுமுறை எடுப்பதாக இருந்தால் முதலமைச்சருக்கு முற்கூட்டியே அறிவிக்க வேண்டும். மாகாண அமைச்சரவையாலும், முதலமைச்சராலும் கொடுக்கப்படும் சட்டபூர்வமான உத்தரவை நிறைவேற்றி வடக்கு மாகாண அரசுக்கு எதுவித தடங்கலுமின்றி செயற்பட ஒத்துக்கொண்டால் பிரதம செயலாளர் தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருக்கலாம். அத்துடன் பிரதம செயலாளர் ஒருவர் முதலமைச்சரின் அனுசரணையுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும் என்ற உரித்து முதலமைச்சருக்கு தொடர்ந்தும் இருக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை பிரதம செயலாளர் சார்பில் மன்றில் முன்னிலையான, சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி, பிரதம செயலாளர் தனது கடமையை - தொழிலை சுதந்திரமாக மேற்கொள்ள உரித்து இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் குழாம், வழக்கை 30 ஆம் திகதி வரையில் ஒத்தி வைத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று வழக்கு மீளவும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தீர்ப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி வழங்கப்படும் என்று தெரிவித்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-5)

### பிரதேச

நல்லூர் பெருந் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த ஆண்டு நல்லூர் பிரதேச செயலகத்தால் உற்சவ காலப் பணிமனை அமைக்கப்படமாட்டாது என்று நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

நல்லூர் திருவிழா இடம்பெறும் காலங்களில் கோயிலின் தெற்கு வீதியில் போஸ்கோ பதிப்பகத்தின் அருகில் நல்லூர் பிரதேச செயலகத்தினால் உற்சவகாலப் பணிமனை அமைக்கப்படுவது வழக்கம். இந்த ஒழுங்கு முறை நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. தற்போது குறித்த காணியினுள் திருமண மண்டபம், மற்றும் வங்கி, கடைத் தொகுதி என்பன அமைந்துள்ளமையால் அதன் அருகில் உற்சவ காலப் பணிமனை கடந்த இரண்டுவருடங்களாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நல்லூர் திருவிழா உற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் யாழ்.மாநகர சபையில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது நல்லூர் பிரதேச செயலக கலசார உத்தியோகத்தரால், தமது உற்சவகாலப் பணிமனைக்குரிய இடம் கோரப்பட்டுள்ளது. இதன் போது, வழமையைப் போன்று அமைக்குமாறு முதல்வர் பதிலளித்துள்ளார்.

இதற்கமைய நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமது உற்சவகாலப் பணிமனையை நேற்று மதியம் அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது குறித்த காணியைப் பராமரிக்கும் உரிமையாளரும் மேற்படி உற்சவகாலப் பணிமனை அமைக்கும் காணி தமது பராமரிப்பில் உள்ளதென்றும், அதில் பணிமனை அமைப்பதில் தமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

நேற்று மதியம், மாநகர சபையின் கணக்காளர், உற்சவ காலப் பணிமனை அமைக்கும் இடத்துக்குச் சென்று, "இங்கே உங்களை யார் பணிமனை அமைக்கச் சொன்னது? இது மாநகர சபையின் காணி. நாங்கள்தான் நீங்கள் எந்த இடத்தில் பணிமனை அமைப்பது என்று தீர்மானிப்போம். இந்த இடத்தில் எமது மாநகர சபையின் பணிமனை அமையும். அதற்குப் பின்னால் பிரதேச செயலகத்தின் பணிமனையை அமையுங்கள்" என்று கடுமையான தொனியில் தெரிவித்துள்ளார்.

அப்போது பணிமனை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஊழியர்கள், "நாங்கள் பிரதேச செயலரின் உத்தரவுக்கு அமையத்தான் இங்கு பணிமனை அமைக்கின்றோம். அவர் சொன்னால் இதனை அகற்றுகின்றோம்" என்று தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர் குறித்த கணக்காளர் அந்த இடத்தை விட்டுச் சென்றுள்ளார். நேற்று மாலை 5 மணியளவில் குறித்த வீதியால் சென்ற யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, தனது காரில் இருந்தபடியே, பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்ட ஊழியரை அழைத்துள்ளார். நல்லூர் பிரதேச செயலக நலன்புரி கிளையின் செயலாளராக உள்ள கிராமசேவையாளர் அருகில் சென்றுள்ளார்.

"யாரைக் கேட்டு பணிமனை அமைக்கின்றீர்கள்? இந்தக் கொட்டிலை உடனே கழற்றுங்கள்" என்று முதல்வர் கூற, "பிரதேச செயலாளர் சொல்லித்தான் நாம் கொட்டில் அமைக்கின்றோம். அவர் சொன்னால் கழற்றுகின்றோம்" என்று அவர் பதிலளிக்க, முதல்வர் அந்த இடத்தை விட்டு அகன்றுள்ளார். பின்னர், யாழ்.மாநகர சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் ஆகியோர் அந்த இடத்துக்கு வந்து அடாத்தாக, "இந்தக் கொட்டிலை கழற்றுங்கள். இல்லாவிட்டால் நாளை இந்தக் கொட்டில் இதில் இருக்காது" என்று பிரதேச செயலக ஊழியர்களிடம் தெரிவித்துள்ளனர்.

பின்னர் நல்லூர் பிரதேச செயலரிடமிருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவுக்கு அமைய, பணியாளர்கள் நேற்று இரவு குறித்த பணிமனையைக் கழற்றியுள்ளனர். அப்போது மாநகரசபை ஊழியர்கள், நல்லூர் கோயில் முன்பாகப் போடப்பட்டிருந்த தடுப்பு வேலிகளைப் பிடுங்கி குறித்த காணிக்குள் யாருமே நுழைய முடியாதவாறு மறித்து அடைத்துள்ளனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில் நந்தனனை தொடர்பு கொண்டு கேட்ட போது, "முதல்வர் பந்தல் அமைக்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளார். அதனால் எம்மால் ஒன்று செய்ய முடியாது. குறித்த காணி யாழ்.மாநகர சபையினுடையது என்று அவர் தெரிவித்துள்ளமையால், அவர்களது அனுமதி இல்லாமல் எம்மால் பணிமனை அமைக்க முடியாது. அத்துடன் மாநகர சபையின் பணிமனைக்குப் பின்னால் எம்மை பணிமனை அமைக்குமாறு மாநகரசபை பொறியியலாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு அமைப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை. இடமில்லாத காரணத்தினால் நல்லூர் பிரதேச செயலக உற்சவகாலப் பணிமனை இந்த ஆண்டு அமைக்கப்படாது" என்று தெரிவித்தார். (ந-5)

### பங்காளியின்

களை அறிவிக்கவுள்ளன. இதன் பிரகாரம் ஊவா மாகாண சபைத் தேர்தலில் எத்தகைய பொறி முறையைக் கையாள வேண்டும் என்பது பற்றி தீவிரமாக ஆராய்ந்துவரும் மலையக மக்கள் முன்னணி நாளை வெள்ளிக்கிழமை தனது நிலைப்பாட்டை அறிவிக்க வுள்ளது. இதற்காக அக்கட்சியின் அரசியல் பீடம் ஹற்றனில் கூடவுள்ளது.

குறிப்பாக, ஊவா தேர்தல் சம்பந்தமாக மலையக மக்கள் முன் னணிக்குள் முத்தரப்புக் கருத்து நிலவிவருகின்றது. தனித்துக் கள மிறங்க வேண்டும் என ஒருசில ரும், அரசுடன் இணைந்து களமி றங்க வேண்டும் என மற்றும் சிலரும், இல்லை, ஐ.தே.கவுடன் இணைந்து களமிறங்க வேண்டும் என ஏனையோரும் வலியுறுத்தி வருகின்றனர். இவை பற்றிக் கலந்துரையாடி இறுதியானதொரு முடிவை எடுக்கும் நோக்கிலேயே வெள்ளியன்று விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், கடந்த முறை தனித்துக் களமிறங்கி ஓர் ஆசனத்தைக் கைப்பற்றிய மலையக மக்கள் முன்னணி இம்முறை அரசுடன் இணைந்தே களமிறங்கும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகளவு தென்படுகின்றன. பலமுனைப் போட்டியே இதற்குக் காரணமாகும் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த முறை தனித்துக் களமிறங்கி 4 ஆயிரத்து 150 வாக்குகளைப் பெற்ற (0.727) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை தனிவழிப் பயணமா அல்லது அரசுக் கூட்டுப் பொறிமுறையா என்பது பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை. இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அக்கட்சியின் அதியுயர்பீடக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை தாருஸலாமில் நடைபெறவுள்ளது. கட்சித் தலைவர் உள்ளிட்ட அதியுயர்பீட அங்கத்தவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

எது எப்படியிருந்தபோதிலும் இம்முறையும் மு.கா. தனித்தே களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முஸ்லிம் கட்சிகளை இணைத்துக்கொண்டு கூட்டாகக் களமிறங்கும் பொறிமுறை பற்றியும் அது தற்போது பரிசீலித்து வருவதாக அறிய முடிகின்றது.

அதேவேளை, அரசில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இதனை அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தினார். அரச தரப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவளிப்பது பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அரச விவகாரம் சூடு பிடித்துள்ளது. அத்துடன், பங்காளிக் கட்சிகளின் இத்தகைய செயற்பாடுகளால் வேட்பு மனு தயாரிப்பு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட விவகாரங்களில் அரச கூட்டுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (ந-சி)

### வல்வெட்டித்துறை

டுள்ளது.

அத்தோடு, சபையில் நடந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி க.அரியநாயகம் தலைமையில் தனிநபர் விசாரணைக் குழுவையும் முதலமைச்சர் அமைத்துள்ளார். குறித்த விசாரணைக்குழுவின் அறிக்கை மூன்று மாதங்களுக்குள் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர், சபையின் தவிசாளரை நீக்குவது அல்லது சபையின் உறுப்பினர்களை நீக்குவது அல்லது சபையைக் கலைப்பது என்ற ஏதாவதொரு முடிவு மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

### புகலிட

கடலில் சுங்க கப்பலில் வைக்கப்பட்டிருந்தபோதும் 157 புகலிட கோரிக்கையாளர்களை இந்தியா ஏற்பது தொடர்பான விடயம் வெற்றியளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புகலிட கோரிக்கையாளர்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி கூறுவதற்கு குடிவரவு அமைச்சர் சில வாரங்கள் மறுத்து வந்தார். பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த அவர், புகலிட கோரிக்கையாளர்கள் தொடர்பில் இந்திய அரசுடன் இரகசியமான பேச்சு நடத்தப்பட்டது என்று தெரிவித்திருந்தார்.

"நாங்கள் நான்கு தெரிவுகள் பற்றி கலந்துரையாடினோம். புகலிட கோரிக்கையாளர்கள் அடையாளம், செயற்பாடுகள், இந்தியா அவர்களை ஏற்பது பற்றி நாங்கள் பேசினோம். ஆனால் இந்தியா அவர்களை ஏற்பதை மறுத்து விட்டது. தமிழ் புகலிட கோரிக்கையாளர்களை ஏற்பது தொடர்பான இந்திய அரசுடனான பேச்சுகள் தோல்வியடைந்தன."- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

### ஊடகவியலாளர்

விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி கொழும்பு சென்று கொண்டிருந்த யாழ். ஊடகவியலாளர்கள், ஓமந்தை சோதனை சாவடியில் மறிக்கப்பட்டு அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுசுமத்தப்பட்டுகைது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படும் சம்பவத்தைக் கண்டித்தே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5,402)

### 6 மாத

யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு விபத்துகளில் 26 பேரே உயிரிழந்துள்ளனர் என்றும், இந்த ஆண்டின் 6 மாதகாலப் பகுதியில் மட்டும் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்த ஆண்டு விபத்தில் 64 பேர் ஆபத்தான காயங்களுக்குட்பட்டனர் என்றும், இந்த வருடம் இது வரையான காலப்பகுதிக்குள் 48 பேர் அவ்வாறான காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-106)

### சீனாவின்

" முன்பிருந்திராத வகையில் சீனா உலகின் ஏனைய பகுதிகளுடன் இணைந்து வருகிறது. சீனாவின் பாதுகாப்பும் அபிவிருத்தியும், ஒட்டுமொத்த உலகினதும் அமைதி மற்றும் செழுமையுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் முதல் முறையாக சீனாவின் ஆயுதப்படைகள் நாள் வரவேற்பு நிகழ்வு எமது தூதரகத்தினால் நடத்தப்படுகிறது. சீனாவும் இலங்கையும், மரபு ரீதியாக நட்புக் கொண்ட அண்டை நாடுகள். 1957 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, இருநாடுகளும் பரஸ்பர அரசியல் நம்பிக்கை, பொருளாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றங்களில் உறுதியான முன்னேற்றம் கண்டுள்ளன.

இரு தரப்பினதும் கூட்டு முயற்சிகள், இருதரப்பு இராணுவ உறவுகளை உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்லும் என்று உறுதியாக நம்புகிறேன்" - என்றார். (ந-5)

## பாதசாரிகள் கடவை அமைக்கக் கோரிக்கை



வலி.தென்மேற்கு, ஜூலை 31
மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன்பாக மஞ்சள் கோட்டுக் கடவை அமைக்கப்படாததால் சந்தைக்கு வரும் பொது மக்கள் தினமும் ஆபத்தை எதிர் நோக்குகின்றனர். எனவே பாதசாரிகளின் நலன்கருதி மஞ்சள் கோட்டுக் கடவை அமைப்பதற்கான நடவடிக் கையை எடுக்குமாறு பொது மக்கள் பிரதேச சபையைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத் திலுள்ள சந்தைகளில் மானிப் பாய் மத்திய சந்தை முக்கி யத்துவமானது. யாழ்ப்பா ணத்திலிருந்து மானிப்பாய் ஊடாகக் காரைநகர் செல்லும் பிரதான வீதியில் அமைந் துள்ள இந்தச் சந்தைக்கு பல இடங்களிலிருந்தும் தினமும் நூற்றுக்கணக்கான பொது மக்கள் வருவது வழக்கம். அதேபோல் சந்தைக்கு அருகிலுள்ள வங்கி க்ளுக்கு அதிகமான மக்கள் வருவது வழக்கம்.

எதிர்பாராத விதமாக ஏற்படும் விபத்துக்களிலிருந்து மக் களைப் பாதுகாக்கும் வகை யில் மஞ்சள் கோட்டுக் கட வையை அமைக்குமாறு பொதுமக்கள் பிரதேச சபை யைக் கோரியுள்ளனர்.

இதேவேளை மக்கள் அதிக மாக நடமாடும் இடங்களில் மஞ்சள் கோட்டுக் கடவை களை அமைக்க வேண்டு மென்று ஏற்கனவே பிரதேச சபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (வ-115)



அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாசாலையில் சரஸ்வதி சிலை திறப்பு விழா நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை அதிபர் வீ. இந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் ஆசிரியர் அமரர் செல்லையா கணேசன் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா திறந்து வைத்தார். (வ-173)

# தலைமை அலுவலகங்களில் முறைப்பாட்டுப் பெட்டிகள்

### வலி.தென்மேற்கு பிரதேச சபை நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஜூலை 31
மக்களின் குறைபாடுகளை உடனுக்குடன் அறிந்து அவர்களைத் திருப்திப்படுத் தும் வகையில் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபை தலைமை அலுவலகம் உட்பட 4 உப அலுவலகங்களிலும் முறைப்பாட்டுப் பெட்டிகளை வைக்கவுள்ளது.

இதற்கான அனுமதியை பிர தேச சபையின் உறுப்பினர் கள் வழங்கியுள்ளனர்.

நான்கு உபஅலுவலகங் களைக் கொண்ட வலி.தென் மேற்குப் பிரதேசம் பரந்துபட்ட பிரதேசமாகும்.

இங்கு வாழும் மக்களுக்கு திருப்திகரமான சேவையைச் செய்ய வேண்டும் என்ற நோக்குடனும் அவர்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற ஆவலுடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் கள் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு உறுதுணை யாக அதிகாரிகளும் கடமை யாற்றுகின்றனர்.

இந்த நிலையில் பணியாளர் களால் ஏற்படும் பாதிப்புக்கள், தாமதங்கள் குறித்து அறிந்து அவற்றுக்கு உடனுக்குடன் தீர்வைப் பெற்றுக் கொடுப்ப தோடு அவர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் நடவ டிக்கை எடுக்க முன்வந்துள்ள பிரதேச சபை, அலுவலகங் களில் முறைப்பாட்டுப் பெட் டிகளை வைப்பதற்கான ஒழுங் குகளை மேற்கொண்டுள் ளது.

செயலாளரின் ஆலோச னைக்கு அமைய முன்னெடுக் கப்படவுள்ள இந்தத் திட்டத்துக் குப் பிரதேச சபை உறுப்பினர் களும் மாதாந்தக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளதை யடுத்து செயலாளர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண் டுள்ளார். (வ-115)

## குடும்பஸ்தரை தீண்டியது விஷப்பாம்பு

தென்மராட்சி, ஜூலை 31
காணி துப்புரவாக்கும் பணி யில் ஈடுபட்ட குடும்பஸ்தர் விஷப்பாம்பால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் பளை அல்லிப் பளையில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி செல்வம் (வயது -42) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவ கச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

# யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த பேராதனை உயர்மட்ட அதிகாரிகள் குழு

### கால்நடை உற்பத்தி சுகாதார நடவடிக்கைகளைப் பார்வையிட்டது

அச்சுவேலி, ஜூலை 31
பேராதனையில் இருந்து வருகை தந்த உயர் மட்ட அதிகாரிகள் குழு யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு ஆலோ சனைகளை வழங்கியது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பேராதனை தலைமைச் செயலகத்தில் இருந்து உயர் மட்ட அதிகாரி கள் குழுவொன்று யாழ்.மாவட் டத்துக்கு பயணம் செய்து யாழ்.மாவட்டத்தில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி கள் பிரிவுகள் மற்றும் மாவட்ட நிலையில் மேற்கொள்ளப் படும் கால்நடை உற்பத்தி சுகாதார நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு ஆலோ சனை வழங்கியுள்ளது.

அத்துடன் மதிப்பீட்டு அறிக் கைகளைப் பெற்றுக்கொண் டது.

மாடு, ஆடுகளுக்கு மேற்கொள் ளப்படும் செயற்கை முறை சினைப்படுத்தல் வேலைத் திட்டம், செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பிறக் கும் பசுக்கன்றுகளுக்கான ஊக்குவிப்பு உதவித்திட்ட சேவைகள் மற்றும் மாடு, ஆடு களுக்கான நோய்த் தடை நட வடிக்கைகள், அபிவிருத்திச் செயற்பாடுகளையும் இந்தக் குழு நேரில் பார் வையிட்டு ஆலோசனை வழங்கியதோடு கலந்துரையாடல்களையும் மேற்கொண்டது. (வ-11)

# சுவாசம் மூலமே தொழுநோய் வேகமாகப் பரவுகிறது யாழில்

### தகுந்த சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியும் என்று துறைசார் மருத்துவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ். குடாநாட்டில் சுவாசம் மூலமாக தொழுநோய் பரவு வது அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் யாழ்ப் பாணத்தில் 39 பேர் தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள னர் - என்று எச்சரிக்கை விடுத் துள்ள துறைசார் மருத்துவர் கள், இந்த நோய்க்கு சிகிச்சை பெறத் தொடங்கி இரண்டாவது நாளில் இருந்து தொழுநோய் பரவுவதைத் தடுக்க முடியும். எனவே தொழுநோய் உள்ள வர்கள் எவ்வித தயக்கமுமின்றி அதற்கான சிகிச்சையை உடன் பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

தொழுநோய் பற்றித் தெளிவு படுத்தும் செய்தியாளர் கருத்த மர்வு ஒன்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது. அந்தக் கருத்தமர்விலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. இதுகுறித்து அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

"தொழுநோயை ஆரம்பத்தி லேயே கண்டறிந்து பூரண சிகிச்சை அளிக்கப்படின் அங்க வீனங்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம். தொழுநோய் கார ணமாக விரல்கள் அழுகி விழும் என்பதில் உண்மை இல்லை. தொழுநோய் ஒருபரம் பரை நோய் அல்ல. பூரண சிகிச்சை அளிப்பதன் மூலம் தொழுநோயைக் குணப்படுத் தலாம். சிகிச்சை பெறும் தொழு நோயாளியிலிருந்து பிறருக்கு இந் நோய் தொற்றாது.

இந்நோய்க்குத் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றால் பாதிப்பிலி ருந்து விடுபடலாம். சிலர் இந்த நோய்க்குச் சிகிச்சை பெற்றுவந்தபோதும் பின்னர் இடையில் அதனை நிறுத்திக் கொள்வதால் அவர்களுக்கு நோய் மேலும் பாதிப்பை ஏற் படுத்துகிறது. தவிர, அவர்க ளுக்கு சிகிச்சை அளிப்பதா யின் மீண்டும் ஆரம்பத்திலி ருந்து வழங்கப்பட்ட மருந்து களை வழங்கியே சிசிச்சை யைத் தொடர முடியும். எனவே தொழு நோயாளர்கள் யாராக இருப்பினும் உடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளத் தயங்க வேண்டாம். நோயாளர்கள் தாமாக முன்வந்து சிகிச்சை பெறவேண்டும் என்பதே பிரதான நோக்கம். உங்கள் இரக சிய தன்மை பாதுகாக்கப்படும். இதற்கான நோய்க் காரணி மைக்கோபக்றீறியம் லெப்றே. மேற்தோலையும் சுற்றுயல் நரம்புகளையும் பாதிக்கும் தொற்றுநோய். பிரதானமாக சுவாசத்தின் மூலமும், தோலில் ஏற்படும் காயங்கள் மூலமும் தொற்று ஏற்படுகிறது. இது தொற் றும்வகை, தொற்றாதவகை என இருவகைப்படும். நோய ரும்புகாலம் 2 மாதங்கள் தொடக் கம் 40 வருடங்கள் வரை பரந்திருப்பினும், சரா சரியாக சுமார் 5 வருடங் களாகும்.

ஒரு சிகிச்சை பெறாத தொற் றும் வகை தொழுநோயாளி யிலிருந்து ஒரு நாளில் சுமார் 100 மில்லியன் கிருமிகள் மூக்கினூடாக வெளியேற லாம். தொழுநோயாளியுட னான நீண்டகால அல்லது நெருக்கமான தொடர்பின் மூலமே தொற்று ஏற்படுகிறது. எனினும் சுலபமாக பாதிப்புக் குள்ளாகக் கூடியவர்களில் தற்செயலான அல்லது குறுகிய நேர தொடர்பினாலும் தொற்று ஏற்படலாம்.

தொழுநோயின் அறிகுறிகள் வெளிறிய அல்லது செந்நிற மான உணர்ச்சியற்ற கடியெது வுமற்ற தடங்கள். காதுச் சோனை முகம், கை, கால் களில் சிறிய மினுமினுப்பான கட்டிகள் நரம்புகள் தடித்துப் போதல். கை கால்களில் தொடர்ச்சியான விறைப்புக் காணப்படுதல் என்பனவாகும். தொற்றாத வகைத் தொழு நோய் எனின் அநேகமாக ஒரு தடம் அல்லது 3 தொடக்கம் 5 வரையான தடம். உடலில் சமச்சீரற்ற தோற்றமான தடங் கள் (நரம்பில் முன் நோக்கித் தள்ளியிருக்கும் புடைப்புக் கள்), தடங்களின் மேற்புறம் காய்ந்து சொரசொரப்பாக இருக்கும். தடங்களில் உணர்ச்சி இல்லாமல் இருக்கும். நன்கு தெளிவான வெளிறிய அல்லது செந்நிற தடங்கள் இருக்கும். தடங்களின் விளிம்புகள் உயர் வாக இருக்கும்.

ஆனால் தொற்றும் வகை தொழுநோயில் பல தடங்கள் காணப்படும். தடங்கள் சமச் சீராக இருக்கும். மேற்புறம் வழுவழுப்பாகவும் மினு மினுப்பாகவும் இருக்கும். தடங்களில் உணர்ச்சி ஓரளவு குறைவாக இருக்கும். உணர்ச்சி பாதிப்ப டையாது. மினுமினுப் பான, செந்நிற நன்கு தெளி வற்ற கொப்பளங்கள் அல்லது தோலில் கட்டிகள் அல்லது கொப்பளங்கள் காணப்படும். இவை நடுவில் உயர்ந்தும் விளிம்புகளை நோக்கிச் சரி வாகவும் இருக்கும். விளிம்பு கள் தோலிலிருந்து புறம்பாகத் தெளிவாகத் தெரியாது.

நோயாளிக்கு உடல்வலி, காய்ச் சல், புதிய தடங்கள் அல்லது கட் டிகள், தசைகளில் பலவீனம், புதிய அங்கவிகாரங்கள் ஏற் படின் உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக வைத்திய நிபு ணரிடம் அனுப்பப்பட வேண் டும் - என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்தமர்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்திய சாலை மருத்துவர்கள் திருமதி எஸ். சத்தி யரேகா, சி. வெனிசியா மற்றும் மருத்துவர் சிவகணேஷ், சுகா தாரக் கல்வி அதிகாரி அ. ஜெய பாலன், சமூக சேவைகள் திணைக் கள அதிகாரி சுரேஸ்குமார் உட் படப் பலர் கலந்துகொண்ட னர். (ற-4)

உதயன்
31.07.2014


## British College of Higher Studies
வழங்கும்

### மிகக்குறைந்த கட்டணங்களில் மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்

உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில்நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகளை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

### Spoken English with Grammar
Duration : 80 Hrs

### Diploma in English
Duration : 110 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.

Batch I : 02/08/2014
Batch II: 03/08/2014
Batches Starts on
Batch III: 04/08/2014
Batch IV: 05/08/2014

08.30am to 12.30pm & 01.00pm to 05.00pm

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road)
Jaffna. (Near Sathosa & Ariyakulam Junction)
Tel : 021-2224550

No.3, 6th Lane, Vairavarkovil Road,
Vairavapuliyankulam (Near Young Star Club)
Vavuniya. Tel :024-3245287

Hotline(s): 0777585913,0777222422, 0714299935


## மரண அறிவித்தல்



### தவராஜா சுரேந்திரராஜ் (பொறியியலாளர் UK)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தவராஜா சுரேந்திரராஜ் (29.07.2014) காலமானார்.

அன்னார் தவராஜா (JP) -ஜெகசோதி (ஓய்வுபெற்ற அதிபர்) தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், ரஞ்சியின் அன்புக் கணவரும், நீலன் (UK), ரோஜன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி செல்வராசா பிரியதர்சினி (Colombo) காலஞ்சென்ற ரவிராஜ் (Canada), திலகர் திலகராஜ் (பொறியியலாளர் Tilko UK) ரகுராஜ் (பொறியியலாளர் UK), திருமதி சிவகுமார் உதயதர்சினி (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கோகிலவாணி (பட்டயக் கணக்காளர் UK) இந்து, செல்வராசா (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனப் பொறியியலாளர் கொழும்பு), சிவகுமார் (UK) காவேரி (Canada) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மகேசன் (பெருந்தெருக்கள் திணைக்களம் - மட்டுவில்), சிவபாக்கியம் நடராஜா, அமுதரத்தினம் காலஞ்சென்ற பத்மாவதி பாலசுந்தரம், திருமதி தங்கரத்தினம் கதிரவேலு (Canada), திருமதி சரோஜினிதேவி சண்முகலிங்கம் (Canada) திரு பொ.சிவநேசன் (Colombo) ஆகியோரின் பெறாமகனும், செல்வகுமார் (Canada) ஜெயந்தன் (Canada) சாந்தாதேவி (Canada) ஜெயந்தி (Canada) வசந்தி (Canada) சுகந்தி (Canada) மனோ (UK), சிறி, குணா, சந்திரலேகா, மதிஅழகன், அன்பழகன், மெய் அழகன், கோமதி, தர்மகுமார், தேவகுமார், மஞ்சுளா, கோமளா ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், Dr. மது (Consultant Nephrologist குருநாகல்) திரு மதிலதா நக்கீரன், சுதா (ஆசிரியர் இந்து மகளிர் கல்லூரி-கொழும்பு) Dr. காயத்திரி (UK) பிரணவன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனும், கபிலன் (UK) பிருந்தன் (UK) சந்தியா (UK) அகிலன் (UK) அநந்தன் (UK) ஆகி யோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Tilko Jaffna City Hotel (Pvt) Ltd,
70/6, K.K.S. Road, Jaffna.
Contact No: 0044798 5219519
0044795740077
0779944439

தகவல்:
தவராஜா திலகராஜ்
(சகோதரன்).

(C/15604)(10)

## சப்ரகமுவ பல்கலை மாணவரின் தடை நீக்கம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடை விதிக்கப்பட்ட 5 மாணவர்களின் தடையை நீக்கி, அவர்கள் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு நேற்று பிரதிவாதிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இணங்கியுள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் உபாலி அபே ரத்ன முன்னிலையில் இந்த விடயம் தொடர்பான மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் 2 மாணவர்களின் வகுப்புத் தடையை நீக்க முடியாதென பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான அரச சட்டத் தரணி மனோகர ஜய சிங்க நீதிமன்றத்தில்தெரிவித்தார்.


வழிகாட்டி நூல்கள் விற்பனையாகின்றன

தொகுப்பு - த.தவசேகர்
- SLAS விலை 600/=
- A/L சகல துறைக்குமான பொதுச் சாதாரணப் பரீட்சை விலை 200/=
- பொது உளச்சார்வு விலை 350/=
- பொது அறிவு - 2014 விலை 500/=

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி) BCS College மன்னார், Gstudy centre வவுனியா, வெள்ளவத்தை தமிழ் சங்கம் ஆகிய இடங்களிலும் பூபாலசிங்கம், அன்னை ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கஜன், கவிதா புத்தக சாலைகளிலும் பெறலாம். வகுப்பு விவரத்திற்கு தொ.பே.: 0754164564



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS

விரையுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093



## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

நேரடியான உரையாடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.

அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை ,உயர்கல்வி மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 02.08.2014 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல்,பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்
பயிற்சியில் இணைய அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை.

SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313


## முக்கிய அறிவித்தல்

### Jaffna College Institute of Technology & Agriculture

எமது நிறுவனத்தில் 02.08.2014 அன்று நடைபெற இருந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு (Institute Day) தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

நன்றி

Chairman,
Management Council,
Jaffna College Institute of Technology & Agriculture

(சி/15264)
(12.3.6)


## Mega Sale
ARPICO DAMRO

ஆடி தள்ளுபடி
என்றும் எங்கும் கிடைக்காத
அமோக விலை குறைப்பு

மாங்கனீ காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 ,021 222 8366 0777 286 069


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

தோற்றம்
09.06.1922





மறைவு
01.07.2014

### அமரர் சீ.வீ. கந்தையா தங்கம்மா

திதி: 31.07.2014

கடந்த 01.07.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு எளிமையும் செம்மையும் தந்த **அமரர் சீ.வீ. கந்தையா தங்கம்மா** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லூர் சட்டநாதர் ஆலய வீதியில் அமைந்துள்ள **திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில்** நடைபெறும். அனைவரும் இந்த நிகழ்வுக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

அன்னாரின் மரணச்செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், தந்தி மற்றும் தபால் மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச் சடங்கின் போது எமக்கு வேண்டிய உதவிகளை செய்தவர்கள் அனைவருக்கும் மலர் வளையம் சாத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம்.

சீ.வீ. கே. சிவஞானம்
குடும்பத்தினர்

(50462) (45.8.)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் .07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.